ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு

தி. மதிவதனன்

சமர்ப்பணம்

அறிவூட்டி ஆ[illegible]ாண்ட

அகிலாண்ட கோடியீன்ற அன்னை

நயினை நாகபூஷணி அம்பாளின்

பத்ம பாதங்களை இறைஞ்சி

யான் இந்நூலை

யாத்த காலை

அமரத்துவம் அடைந்த

அன்புப் பாட்டியார்

விஸ்வலிங்கம் அன்னப்பிள்ளை அவர்கட்கு

ஆகும் இந்நூல்....

ஆசியுரை

ஆசிரியர் திரு.தி.மதிவதனன் அவர்களால் எழுதப்பட்ட ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு என்ற இந்நூல் பருமனில் சிறியது ஆயினும் கருத்தளவிலும், கொள்ளளவிலும் மிகப் பெரியது. காலத்தின் தேவை கருதி இந்நூல் வெளியிடப்படு கின்றது. வரலாற்றுக் காலங்களைப் புரட்டி எமது தொன்மொழி யாகிய தமிழின் இலக்கியம் பல்வேறு காலகட்டங்களில் பெற்ற வளர்ச்சிப் போக்கினை சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கு கின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றினைக் கற்போருக்குச் சான்றாக அமைவன ஒரு சில ஆதாரங்களே. அவற்றைக் கொண்டு பரந்த ஒரு காலப் பகுதியில் வரலாற்று நோக்கிலே தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி எமது நாட்டில் எவ்வாறு வளர்ந்தது, இதற்குரிய காரணங்கள் எவை என்பன போன்ற விடயங்களை தெளிவாக விளக்கும் திறமை நூலாசிரியருக்கே உரியதாகும்.

எமது இலக்கிய வரலாற்றின் வளர்ச்சியில் இந்நூல் ஒரு படிக் கல்லாக அமைகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கற்கும், ஆராயும் அறிஞர்களுக்குப் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இலங்கையில் ஆரம்பகாலம் முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை காலம் காலமாக, கட்டம் கட்டமாக எழுந்த நூல்கள் பற்றியும் அவற்றின் இலக்கியப் பண்புகள் பற்றியும் தக்க சான்றுகளுடன் நிலைநிறுத்திச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

20 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்து எழுதுவதற்கு முன்னோடியாக அமையும் இந்நூல் மூலமாக அடுத்த தொடர்ச்சியான இலக்கிய வரலாற்றைத் தெளிவுபடுத்தி தமிழ் அன்னையின் வளர்ச்சிக்கு ஆற்றுவார், ஆற்றவேண்டும் என்ற ஆதங்கத்துடன் நூலாசிரியரின் முயற்சியைப் பாராட்டுவ துடன் எதிர்கால வளர்ச்சிக்கும் எனது மனமுவந்த நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நல்ல கைங்கரியம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக.

திருமதி. செ. மகாலிங்கம்
கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துரை

பல்கலைக்கழக புகுமுக மாணவர்களது தமிழ்ப்பாட கலைத் திட்டத்தில் பெரும்பகுதியை ஒரு காலத்தில் இலக்கிய வரலாறு இடம் பிடித்துக் கொண்டது. ஆனால் இன்று இலக்கிய வரலாறு ஈழத்து இலக்கிய வரலாறாகவும் பிரிந்து கலைத்திட்டத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டதோடு மொழி யார்வம் நிறைந்த பலரது தேடலுக்கும் இலக்காகி உள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொட்டு கல்லூரி ஆசிரியர்கள், மொழி ஆர்வலர் வரை இத்தேடலில் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் திரு.தி.மதிவதனன் ஆசிரியர் அவர்களின் தேடலின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது.

நூலாசிரியர் வரலாற்று ரீதியாக இலக்கியப் பண்புகளை பிரித்துத் தெளிவுபடுத்தியுள்ளார். எனினும் இந்நூல் 20 ஆம் நூற்றாண்டுக் காலத்தையும் உள்ளடக்கியிருப்பின் சிறப்பையும் பூரணத்துவத்தையும் மேலும் அடைந்திருக்கும்.

காலத்தின் தேவை கருதி இந்நூல் வெளிவருகின்றது. ஆசிரியரின் நீண்டகால கற்பித்தல் மூலம் கிடைத்த அனுபவத்தின் முதிர்ச்சியை இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது. பல்கலைக் கழக புகுமுக மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இந்நூல் அமைக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் மட்டுமல்லாமல் ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஆர்வமுள்ள பலரும் இந்நூல் மூலம் பயனடைவர்.

ஆர்வமும் விடாமுயற்சியும் உள்ள இவ் ஆசிரியர் இந்நூல் மூலம் மாணவர் உட்பட பலரது உள்ளங்களில் நிறைந்து நிற்பார். மேலும் பல ஆக்கங்கள் வெளிவர வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றேன்.

மருதனார்மடம்
சுன்னாகம்

வீ. இராசையா
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம்

வாழ்த்துரை

எமது பிரதேச அறிஞர்கள் மாணவர்களுக்குத் தேவையான துணை நூல்களைப் பிரசுரிப்பது இன்று அருகி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதற்குப் பொருளாதாரமும் சந்தைப்படுத் தலும் மாணவர்களின் கற்றல் முறைகளும் காரணமாகின்றன. இந்நிலையில் சிரேஷ்ட ஆசிரியர் திரு.தி.மதிவதனன் அவர்கள் ''ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு'' என்ற நூலை வெளியிட முன் வருவது பாராட்டுக்குரியது.

ஆசிரியர் அவர்கள் தனது நீண்டகால அனுபவத்தையும், தேடல்களையும் இந்நூலினூடாக மாணவர்களுக்கு முன்னிலைப் படுத்தியுள்ளார். உயர்தர மாணவர் மத்தியில் இந்நூலிற்குப் பெரிய வரவேற்பு இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியர் அவர்களினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம், இந்து மத வரலாறு ஆகிய நூல்களுக்கும் மாணவர் மத்தியில் பெரு வரவேற்பு இருந்தது யாவரும் அறிந்ததே. இவருடைய இம் முயற்சி வெற்றிபெற வாழ்த்துவதுடன் வருங்காலத்தில் மேலும் பல பதிப்புக்களை ஆக்குவதற்கு இவருக்கு மனஉறுதியைக் கொடுக்க இறை யருளைப் பிரார்த்திக்கின்றேன்.

தீவகக் கல்வி வலயம்
வேலணை

ப. விக்கினேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்

பாராட்டுரை

எமது கல்லூரி ஆசிரியர் திரு.தி.மதிவதனன் அவர்களின் தமிழ்மொழி நூல் வெளியீட்டு வரிசையில் இடம்பெறும் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூல், ஆசிரியரின் தமிழ் மீதான ஆழ்ந்த புலமையை எடுத்துக் காட்டுகின்றது.

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதும்போது பல உசாத்துணை நூல்களின் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளும் மொழிநடைப் பாங்கில் எழுதப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். இந்நூலினூடாக சமூக, கலாசார, பண்பாடு இணங்கியும் முரண்பட்டும் செல்லுதல் வாசிப்போரை ஆராயத் தூண்டும் செயல்முறைக்கு இட்டுச்செல்வது இன்னோர் சிறப்பம்சமாகும்.

நூலாசிரியர் கல்லூரியில் நீண்ட காலப்பகுதியில் தமிழ்மொழி, இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்பித்துப் பெற்ற அனுபவங்களையும் இந்நூலினூடாக மாணவர்களிடையே பகிர்ந்து கொள்ளத்தக்கதாகவும் தேடும், ஆராயும் மனப்பாங்கினையும் வளர்ப்பதாகவும் அமைந்துள்ளதெனின் மிகையாகாது.

திரு.ந.பரமசிவம் B.A.,Dip. in Ed.
அதிபர்
யா/யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.

வாழ்த்துரை

தமிழ் இலக்கிய வரலாற்றுத் துறையானது பல நூற்றாண்டுகால தொன்மையைக் கொண்டது. இத்தகைய தொன்மைமிக்க வரலாற்றை மாணவர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் ஆர்வத்துடன் வாசிக்கும் வகையில் மிக நேர்த்தியான முறையில் " ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு" (இரண்டாம் பதிப்பு) என்னும் நூலாக ஆசிரியர் நயினை தி. மதிவதனன் அவர்களால் ஆக்கப் பட்டுள்ளது.

சங்ககாலம் தொடக்கம் 19ம் நூற்றாண்டு காலப்பகுதி வரைக்குமுள்ள வரலாறுகளில் முக்கியமானவற்றைத் தனது நூலில் தொகுத்துள்ளார். பல நூலாசிரியர்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பல விடயங்களை கூறியிருப்பினும் இந் நூலாசிரியர் அவ்விடயங்களைக் கூர்ந்து அவதானித்து, சீர்தூக்கிப் பார்த்து இலக்கிய வளர்ச்சியை ஆராய்ந்து, தமது கருத்தைக் கூறுகின்றார்.

இந்நூலானது மாணவர்கள் மிக இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் பல தலையங்கங்களாகப் பிரிக்கப்பட்டு எளிமையான மொழிநடையில் விளக்கப்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சிபெறவேண்டும் என எதிர்பார்க்கப்படும் இக்கால சூழலில் இந்நூலின் வருகை மிக்க பயனுடையதாகும்.

ஒவ்வொரு கால கட்டத்தையும் விளக்கும்போது இவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமை வெளிப்படையாகத் தெரிகின்றது. நீண்டகாலம் தமிழ் மொழியைக் கற்பித்த அனுபவம் ஆசிரியரின் இம்முயற்சிக்கு உதவி இருக்கலாம் என நம்புகிறேன்.

நயினை நாகபூஷணி அம்மாளின் அருளால் இவரது இலக்கியப் பணியும் கற்பித்தல் பணியும் சிறப்புற்று மேலோங்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு. இ. இளங்கோவன்
செயலாளர்
கல்வி அமைச்சு
வடமாகாணம்

பாராட்டுரை

"ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு" என்ற நூலின் ஆசிரியர் திரு.தி. மதிவதனன் அவர்கள் ஈழத்து தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் மத்தியில், குறிப்பாக பல்கலைக்கழக புகுமுக மாணவர்களின் உள்ளத்தில் என்றும் நிறைந்துள்ளவர். ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றை காலகட்டங்களாக வகுத்து சங்ககாலம் முதல் 19ம் நூற்றாண்டு வரை மிக ஆழமாக அலசி ஆராய்ந்து, பின்னர் ஒழுங்குற தெளிவுபடுத்தி எழுத்து வடிவில் தந்துள்ள பணி, தமிழர்களுக்கும் தமிழ் கற்கும் மாணவர்களுக்கும் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை நன்கு தெளிவுபெறச் செய்த ஓர் அரிய செயற்பாடாகும்.

இந்நூலின் அமைப்பு, வெளிப்படுத்தும் திறன், மேலும் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய முறையில் கையாண்ட மொழிநடை என்பன ஆராய்ச்சியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நூலாசிரியர் செய்த ஒரு செயற்கரிய செயலாகும் என்று கூறுவது மிகையாகாது. இந்நூல் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கு ஆதாரக் கைந்நூலாக விளங்குவது மாணவர்கள் பெற்ற பெரும் பேறாகும்.

இந்நூலாசிரியரின் ஆழ்ந்த புலமையையும் அதனை நூல் வடிவில் எதிர்கால சமூகத்தினருக்கு வழங்கியமையையும் எவராலும் பாராட்டாமல் இருக்கமுடியாது. இவரது அயரா முயற்சி பலம் பெற்று மேலும் பல அரிய நூல்களாக வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

விமலா கந்தையா
உதவி கல்விப் பணிப்பாளர்
தமிழ்த் துறை
வலயக்கல்வி பணிமனை
வலிகாமம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு நோக்கு...

ஆசிரியர் திரு.தி.மதிவதனன் அவர்களின் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன். ஆசிரியரின் தேடல், கற்பித்தல் அனுபவம் வாயிலாக எழுதப்பட்ட இந்நூல் க.பொ.த. உயர்தர வகுப்பிலும் பல்கலைக்கழகத்திலும் பயில்வோருக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

தனது கற்பித்தல் அனுபவங்களுக்கூடாகத் தான் பெற்ற பட்டறிவை முதன்மைப்படுத்தியும் பயன்படும் வகையில் இந்நூல் ஆக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

மாணவர்களும் இலக்கிய ஆர்வலர்களும் எளிதாக விளங்கிக் கொள்ளக்கூடிய எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளமை மிகவும் சிறப்பானதாகும்.

உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கதாகும். ஆசிரியரின் பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. *ச.* பாஸ்கரன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கோட்டக்கல்விப் பணிமனை
ஊர்காவற்றுறை

ஈழ தமிழ் இலக்கிய வரலாறு பற்றி...

ஆசிரியர் திரு.தி.மதிவதனன் அவர்களின் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு மீள்பதிப்பு வருவதையிட்டு மனமகிழ்வடைகிறேன். பல்கலைக்கழக புகுமுக வகுப்பு மாணவர்களின் தேவையை நிறைவு செய்யும் ஓர் அரிய படைப்பாக இந்நூல் விளங்குகின்றது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஏற்றவகையில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியது. நூலின் மீள்பதிப்பு வெளிவருவது நூலின் தேவையையும் பயன்பாட்டையும் வெளிப்படுத்துகின்றது.

நூலாசிரியரின் ஏனைய நூல்களான தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம், இந்துமத வரலாறு I, இந்து மத வரலாறு II, என்பன மாணவர்களினால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சங்க காலம் தொடக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஈழத்து தமிழ் இலக்கியங்களையும் அதன் சிறப்பார்ந்த பண்புகளையும் தக்க சான்றுகளுடன் மாணவர்கள் மட்டுமன்றி தமிழ் ஆர்வலர்கள் யாவரும் இலகுவாக படித்தறிவதற்கேற்ற வகையில் வளமார்ந்த மொழிநடையைக் கையாண்டு வெளிப்படுத்தியுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும். ஆசிரியரின் பணி தொடர எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அரசரத்தினம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
நெடுந்தீவு

அணிந்துரை

சமூக பொருளாதார பண்பாட்டு வரலாற்றின் ஒன்றிணைந்த இயக்கமாகவும் விசையாகவும் அமைவதே இலக்கிய வரலா றாகும். இலக்கியம் என்ற விசை, சமூகத்தின் அடித்தளச் செயல் முறைகளுக்கு இணங்கியும் முரண்பட்டும் இயங்குதலை இனம் காண்பதற்குப் பரந்துபட்ட தகவல் சேகரிப்பும், சான்றாதாரத் திரட்சியும் பன்முகப் பரிமாணங்களை இனங்காணும் புலமைப் பயிற்சியும் தவிர்க்கமுடியாது வேண்டப்படுகின்றன. இத்துறை யில் ஆர்வம்மிக்க தேடல் உளப்பாங்கு கொண்ட இந்நூலாசிரி யரின் முயற்சி மாணவர்களுக்குப் பயன்படும் ஓர் ஆக்கத்தை தந்துள்ளது. மாணவர்களைத் தொடர்ந்து சிந்திக்க வைக்கவும் தொடர்ந்து வாசிப்பில் ஈடுபட வைக்கவும், தொடர்ந்து தேடலில் செயற்பட வைக்கவும் வல்ல ஆக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றாய்வில் ஈடுபட்டவர்களை மாணவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய புலக்காட்சியினை ஏற்படுத்துவதில் நூலாசிரியரின் முயற்சி முன்னேற்றம் பெற்றுள்ளது.

இந்நூலைப் படிக்கும்பொழுது ஈழத்து இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியிற் காணப்படும் இடைவெளிகளையும் புதைந்த சுவடுகளையும் தேட வேண்டிய ஊக்கல் பிறப்பிக்கப்படுதலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

தமது நீண்ட கற்பித்தல் அனுபவம் காரணமாக, நூலாசிரியர் தி.மதிவதனன் அவர்கள் தாம் திரட்டிய இலக்கியத் தகவல்களை வரன்முறையாகத் தொகுத்தும், நிரற்படுத்தியும் சிறப்பார்ந்த பண்புகளை முன்னிலைப்படுத்தியும் நூலாக்கத்தைச் செம்மைப் படுத்தியுள்ளார். நூலாசிரியரின் பணி பாராட்டுதற்குரியது.

பேராசிரியர் சபா.ஜெயராசா
கல்வியியற் துறை
யாழ். பல்கலைக்கழகம்

அறிமுகவுரை

தமிழ்மொழி பயிற்றுவித்தலில் நீண்டகால அனுபவமும் தமிழியலின்பால் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்ட திரு.தி.மதிவதனன் அவர்களுடைய பிறிதொரு படைப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு வெளிவருகின்றது.

''தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்'' என்ற நூலின் வழி தமிழ் மாணாக்கரிடையேயும் தமிழ் ஆர்வலரிடையேயும் நன்கு பரிச்சயமான இந்நூலாசிரியருக்கு வேறு அறிமுகங்கள் வேண்டியதில்லை.

''ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு'' பற்றிய புலமைச்சிரத்தை என்பது இன்றைய காலகட்டத்தில் மிகவும் வேண்டப்படும் ஒன்றாகவே அமைந்துள்ளது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறெழுத்தியல் முயற்சிகள் இத்துறைசார் அறிஞர்களினால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டே வந்துள்ளன. எனினும் இவ் வரலாற்றைத் துலக்குவதற்குத் தேவையான தரவுகளைத் திரட்டிக் கொள்வதில் காணப்படும் பல்வேறு இடர்ப்பாடுகள் முழுமையான ஒரு இலக்கிய வரலாற்றை வடிவமைப்பதில் பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகின்றன.

கிடைக்கின்ற தரவுகளை மட்டும் வைத்துக்கொண்டு குறித்த காலகட்டத்திற்குரிய சமூக பொருளாதார அரசியல் பின்னணிகள் இலக்கிய வளர்ச்சி, இலக்கிய மரபு, மரபு மாற்றம் முதலானவற்றை விளங்கிக்கொள்ள வேண்டிய நிலையிலேயே இன்றும் நாம் உள்ளோம். சாசனம் மற்றும் தொல்பொருட் சான்றுகளின் வழி இலக்கிய வரலாற்றைச் சமூகவியல், மொழியியல் பின்னணியில் மேலும் தெளிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்கள் இன்றுவரை கனியவில்லை. இந்நிலையில் அதிலும் குறிப்பாக 19ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை முறைப்படுத்துவதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

திரு.தி.மதிவதனன் அவர்களுடைய இந்நூல் இத்துறை குறித்து எழுந்துள்ள புதிய வரவாகும். இந்நூலாசிரியர் மாணவர்களை இலக்காக வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் இந்நூலினை வடிவமைத்து உள்ளார். ஈழத்துப் பூதன்தேவனார்

பற்றிய கருத்துக்கள் தொடங்கி ஆரியச் சக்கரவர்த்திகள் காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், பத்தொன்பதாம் நூற்றாண்டு என இந்நூலின் அத்தியாயங்கள் விரிவடைந்துள்ளன.

இலக்கிய வரலாற்றுக் காலங்கள் ஒவ்வொன்றுக்குமுரிய இலக்கியங்களின் (TEXT) வழி அக்காலத்தின் இலக்கியப் போக்கு களைக் கண்டுணர இந்நூலாசிரியர் முனைந்துள்ளமை புலனா கின்றது. பாடநூலாக்க (TEXT BOOK) முயற்சியில் இது ஒரு புதிய பரிணாம வளர்ச்சியினைக் காட்டி நிற்கின்றது. காலங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய இலக்கியப் பண்புகள் குறித்தும் ஒரு கால கட்டத்து இலக்கியப் பண்புகளுடன் பொருத்திப் பார்ப்பதான முயற்சிகளையும் இந்நூலாசிரியர் செய்துள்ளார்.

உயர்நிலைப் பட்டப் படிப்புக்களில் தமிழை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றை விரிவான நிலையில் அறிமுகப்படுத்துவதில் இந்நூல் வெற்றி கண்டுள்ளது என்றே கூறலாம். ஆயினும் இருபதாம் நூற்றாண்டைப் பற்றியும் இந்நூலாசிரியர் கவனம் எடுத்திருக்கவேண்டும்.

பிற நூலாசிரியர் கருத்துக்களை ஆங்காங்கே எடுத்தாளும் நூலாசிரியர் அவை பற்றிய விவரங்களை அடிக்குறிப்புக்களாகத் தந்து அதன் வழி தனது கருத்துக்களை முதன்மைப்படுத்தியிருந் தால் இந்நூலின் தகுதி பிறிதொரு தளத்தில் வைத்துப் பார்க்கப் படுவதற்கான தேவையை உணர்த்தியிருக்கும். இந்நூலாசிரியர் அத்னைச் செய்யவில்லை. எவ்வாறெனினும் அறிஞர் பலரும் பேசத் தயங்குகின்ற ''பேசாப்பொருளொன்றை'' ஆசிரியர் பேச முனைந்தமை பாராட்டுக்குரிய ஒன்றேயாம்.

கலாநிதி கி.விசாகரூபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

என்னுரை

காலத்தால் வாடாத கன்னித் தமிழ் வளர்த்த நாடுகளில் ஈழத்திற்கும் தனித்துவமான பங்குண்டு. தமிழணங்கை வளர்த்து உயர்த்தி வளம்படுத்தி தனக்கென ஒரு உயர்ந்த வரலாற்றுப் பாரம்பரியத்தை நிலைநிறுத்திய பெருமையும் ஈழத்திற்கு உண்டு.

ஈழத்திருநாட்டில் தோன்றிய தமிழ் இலக்கியங்களின் வரலாற்றைத் தெளிவாக விளக்குவதற்கு பல இடர்பாடுகள் உள்ளன. ஈழத்தில் தோன்றிய இலக்கியங்கள் பேணப்படாது அழிந்தொழிந்தமை, பேணப்பட்ட இலக்கியங்களில் காணப்படும் கருத்து முரண்பாடுகளும் முக்கிய தடைக்கல்லாக உள்ளன. இருப்பினும் கிடைக்கப்பெற்ற இலக்கியங்களைக் கொண்டு எனது அறிவுக்கெட்டியவரைமாணவர்களுக்கும், ஈழத்து இலக்கிய வரலாற்றை அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கும் ஏற்றவகையில் மிகஎளிய நடையில் எழுதியுள்ளேன்.

எனது தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம் படித்த ஆசிரியரும் மாணவரும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கும் வரலாறு எழுதுமாறு கூறி ஊக்கம் கொடுத்ததன் விளைவாக உருவாகியதே இந்நூல். 1997ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த (உ.த.) வகுப்பில் தமிழ் மொழி பயிலும் மாணவர்களுக்கு ஈழத்து இலக்கிய வரலாறு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியச் செல்நெறியினை மாணவர் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஈழத்து இலக்கிய வரலாற்றை அறிய உதவும் நூல்கள் குறைவாகவே உள்ளன. இதன் விளைவாக மாணவர்கள் மனங்கொள்ளத்தக்க வகையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் இந்நூலினை ஆக்கியுள்ளேன். இதில் தவறவிடப்பட்ட விடயங்களை இலக்கிய ஆர்வலர்கள் சுட்டிக்காட்டின் மறுபதிப்பில் அதனைத் திருத்துவதற்கு உதவியாக அமையும். கடந்த பல வருடங்களாக உயர்தர வகுப்புகளுக்கு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கற்பித்தபோது ஏற்பட்ட இடர்களை யெல்லாம் கருத்திற்கொண்டு இயன்றவரை அதனை இலகுவாக்கி சங்க காலம் தொடக்கம் 19ஆம் நூற்றாண்டு வரை எழுதியுள்ளேன். இதன் தொடர்ச்சியான 20ஆம் நூற்றாண்டு பின்னர் வெளிவரும்.

ICUTS

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தவர் யாழ் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அவர்கள். இந்நூலுக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு வீ. இராசையா அவர்களும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. விக்கினேஸ்வரன் அவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுமாறு கூறி ஊக்கப் படுத்தியதுடன் அதனைப் பாராட்டிப் பெருமைப்படுத்தியுள் ளார். கல்லூரி அதிபர் திரு ந. பரமசிவம் அவர்கள்.

எனது இந்நூலினை வாசித்து செம்மைப்படுத்தி அணிந்துரை வழங்கி அணி செய்துள்ளார் என் குருநாதர் பேராசிரியர் சபாஜெயராசா அவர்கள்.

எனது தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம் என்ற நூலின் அறிமுகவுரையை நிகழ்த்தியபோது ஈழநாட்டில் தோன்றிய தமிழ் இலக்கியங்களிற்கும் அவ்வாறான ஒரு வரலாறு எழுத வேண்டு மென வேண்டுகோள் விடுத்து அதற்கான உதவிகளை வழங்கிய துடன் எனது இந்நூலினை வாசித்து அறிமுகவுரையினையும் வழங்கி அலங்கரித்துள்ளார் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி. விசாகரூபன் அவர்கள்.

இந்நூலினை கணினியில் வடிவமைத்துத் தந்தவர் ஸ்ரீவிநாயகர் பதிப்பக உரிமையாளர் நண்பர் ச. நித்தியாநந்தன் அவர்கள். அட்டைப் பதிப்புச் செய்துதவிய குரு பட்டுத்துணிப் பதிப்பக உரிமையாளர் நண்பர் பா. விமலேந்திரன் அவர்களும் அவர் தம் ஊழியர்களும் என்றும் எனது நினைவில் நின்று போற்றுதற்குரிய வர்கள். அவர்களுக்கு எனது அன்பினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

அன்பன்

தி.மதிவதனன்

8ம் வட்டாரம்
நயினாதீவு

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
10-01-2003

ICUTS
சர்வதேச பல்கலைக்கழக
தமிழ் மாணவர் ...

பொருளடக்கம்

1. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு 15
2. ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் 22
3. ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியப் பண்புகள் 27
4. போர்த்துக்கேயர் காலம் 38
5. போர்த்துக்கேயர் கால இலக்கியப் பண்புகள் 40
6. ஆரியச் சக்கரவர்த்திகள் காலமும் போர்த்துக்கேயர் காலமும் ஒப்பு நோக்கு 43
7. ஒல்லாந்தர் காலம் 46
8. ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகள் 53
9. 19ஆம் நூற்றாண்டு 57
10. 19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் இலக்கியம் வளர்ச்சி அடைந்தமைக்கான காரணங்கள் 59
11. 19ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி 62
12. 19ஆம் நூற்றாண்டின் இலக்கியப் பண்புகள் 69
13. உசாத்துணை நூல்கள் 78

ICUTS

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு

அறிமுகம்

நெடிய நீண்ட வரலாறுடைய தமிழ்மொழி வழங்கி வரும் நாடுகளில் இலங்கை குறிப்பிடத்தக்க இடத்தை வகித்து வருகின்றது. இந்தியாவின் தமிழ் வழங்கி வரும் பிரதேசமாகிய தமிழகத்திற்கு மிக அண்மையில் இலங்கை அமைந்திருப்பதனால் தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகள் மிகப் பழங்காலம் முதல் இருந்து வந்துள்ளது. இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகளை மிகப்பழைய இதிகாச புராணங்களில் இருந்து அறியமுடிகின்றது. வால்மீகியின் இராமாயணம் இலங்கை வேந்தனாகிய இராவணன் சிறந்த சிவபக்தன் எனவும் அவன் கோணேசர் ஆலயத்தை வழிபட்டு வந்ததாகவும் கூறுகின்றது. மகாபாரதம் ஆதி பருவப் பகுதியில் தெற்கே தலயாத்திரை மேற்கொண்ட அர்ச்சுனன் திருக்கேதீஸ்வரனை வழிபட்ட பின்னர் அல்லி அரசாணியைச் சந்தித்ததாகக் குறிப்பிடுகின்றது. புராணங்களில் ஒன்றாகிய மகாபாகவத புராணம் இராவணனின் இலங்காபுரியைக் குறிப்பிடுகின்றது. தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகளை பட்டினப்பாலை, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

''ஈழத்துணவும் காளகத்தாக்கமும்'' என வரும் பட்டினப்பாலை வரிகளும் ''நன்னகர் மாந்தை முற்றத்துண்ணா பணிதிறை தந்த பாடுசார் நன்கலம் பொன்செய்பாவை, வைரமோடாம்பல்

ஒன்னுவாய் குவையியன்ற நிலத்தினைத் துறந்த நிதியத்தன''
எனவரும் அகநாநூற்றுப்பாடல் வரிகளும், தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்குமிடையேயிருந்தவாணிபத்தொடர்பையும் உறவையும் வெளிப்படுத்துகின்றன. தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்தாலும் தமிழக இலக்கிய வரலாற்றோடு ஈழத்து இலக்கிய வரலாற்றை பொருத்தி நோக்கும்போது 2000 வருடகால பழமையுடைய தமிழ் இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியம் ஈழத்தில் கி.பி. 14ம் நூற்றாண்டுவரை தெளிவாக அறிய இயலாதவாறு தொய்ந்தே காணப்படுகின்றது.

சங்ககாலம் தொடக்கம் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் வரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி நோக்கும் போக்கும்

ஈழமும் பூதன் தேவனாரும்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராயப் புகுபவர்கள் ஈழத்தின் ஆரம்ப காலமாக தமிழ்ச் சங்கப் புலவர்களில் ஒருவராக இருந்த ஈழத்துப் பூதன் தேவனாரைக் கொள்ளும் மரபு உண்டு. ஈழத்துப் பூதன் தேவனாரால் பாடப்பட்ட செய்யுட்களில் ஈழம் பற்றிய எதுவித குறிப்புக்களும் இல்லை. ஈழத்துப் பூதன் தேவனார், மதுரை ஈழத்துப் பூதன் தேவனார், பூதன் தேவனார் போன்ற பெயர் விகற்பங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இதனால் இவற்றில் வரும் ஈழம் என்ற சொல் இலங்கையைத்தான் குறிப்பிடுகின்றது எனச் சித்தாந்தமாகக் கொள்ளமுடியாது என கலாநிதி பொ. பூலோகசிங்கம் குறிப்பிடுவார். ஈழத்து பூதன் தேவனார் இலங்கையிற் பிறந்து வளர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வரை அவரது பாடல்களை ஈழத்து இலக்கிய வரிசையில் இணைத்துக் கூறமுடியுமா என்பது சந்தேகமே எனவும் அப்புலவர் பெயருக்கிட்டுள்ள அடைமொழியான ஈழத்து என்ற சொல்லை மட்டும் கொண்டு அவர் ஈழத்தவர் என்று கூறுவது தக்கதெனத் தோன்றவில்லை. ஈழவர் என்ற வகுப்பினர் கேரள நாட்டில் வாழ்ந்தனர் என அறியப்படுகின்றது. அவர் வாழ்பதியும் ஈழம் என வழங்கப்பட்டிருத்தல் சாலும் எனக் கலாநிதி க.செ. நடராசா குறிப்பிடுவார்.

ஈழத்துப் பூதன் தேவனாரை இலங்கையர் என்று முதன்முதற் கூறியவர் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மகாவித்துவான் சி.கணேசையர் அவர்களே. இவர்களது கருத்துக்களை எல்லாம் நுணுகி ஆராய்ந்த பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தொல்லியற் சான்றுகளையும் இலக்கியச் சான்றுகளையும் கல்வெட்டாதாரங் களையும், புவியியற் சின்னங்களையும் கொண்டு பூதன் தேவனார் இலங்கையைச் சேர்ந்தவர் என்று முடிவுகட்டுகின்றார். இவர் காட்டிய சான்றுகளைத் தகுந்த ஆதாரம் காட்டி மறுக்கும் வரை ஈழத்துப் பூதன் தேவனாரை இலங்கை நாட்டவர் என்று கூறுவதற் குத் தயங்கவேண்டியதில்லை என கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா குறிப்பிடுவார். ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை ஈழத்துப் பூதன் தேவனார் வாழ்ந்த காலமாகிய சங்க காலத்தி லிருந்தே பேராசிரியர் ஆ. சதாசிவம் ஆரம்பித்து தமது ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தில் விளக்கியுள்ளார்.

ஈழத்துப் பூதன் தேவனாரால் பாடப்பட்ட (07) செய்யுட்கள் சங்க இலக்கியத்தொகை நூல்களில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை நற்றிணை 366, அகநானூறு 88,231,307, குறுந்தொகை 343,360,189 என்பனவாகும். ஈழத்து என்று அடைமொழி பெற்றிராத வேறு பல இலங்கைப் புலவர்கள் பாடிய பாடல்கள் அடையாளம் காண முடியாமல் போயிருக்கலாம்.

ஈழத்துப் பூதன் தேவனாரினது பாடல்களில் தலைவியினது அங்க வர்ணனையை அகம் 307 நற்றிணை 366ல் காண முடிகின் றது. குறுந்தொகை 360ஆம் செய்யுளில் குறிஞ்சியில் முருக வழிபாட்டின் ஒரு கூறாகிய வெறியாட்டு நிகழ்ந்தமையை ''வெறியென உணர்ந்த வேலவன் நோய் மருந்து'' என்ற தொடர் மூலம் உணரமுடிகின்றது. அகநானூறு 231ஆம் செய்யுள் நடுகல் வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

அகம் 88ஆம் செய்யுளும் குறுந்தொகை 343ஆம் செய்யுளும் 360ஆம் செய்யுளும் உள்ளுறை கொண்டு பாடப்பட்டுள்ளன. அகம் 307ஆம் செய்யுளும் நற்றிணை 366ஆம் செய்யுளும் இறைச்சிப் பொருளும் கொண்டு புனையப்பட்டமை இவரது பாடல்களின் சிறப்பம்சம் ஆகும். இவர் பாடிய குறுந்தொகை

189ஆம் செய்யுள் உரையாசிரியர்களினால் மேற்கோள் காட்டப் பட்டமையும் இவரது சிறப்பாகும்.

ஈழத்துப் பூதன் தேவனாரை அடுத்து கி.பி. 14ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் ஆட்சி நிறுவும் வரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு இருண்டே காணப்படுகின்றது. கி.பி. 9ஆம், 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படும் அனுராதபுரத் தில் உள்ள நாலுநாட்டார் கல்வெட்டில்

''போதி நிழலமர்ந்த புண்ணியம்போ லெவ்வுயிர்க்குந்
தீதி வருள் சுரக்குஞ் சிந்தையா - னாதி
வருதன்மங் குன்றாத மாதவன் மாக் கோதை
யொரு தர்ம பாலனுளன்.''

என வருகின்ற வெண்பாவின் அமைப்பு அக்காலப்பகுதியிற் சிறந்த தமிழ் இலக்கியப் பாரம்பரியம் இருந்ததனையே கோடிட்டுக் காட்டுகின்றது. இத்தகைய செய்யுள் வளம் கி.பி. 9ஆம், 10ஆம் நூற்றாண்டளவில் ஈழத்தே விருத்தியடைந்திருந்தது என்றால் அதற்கு சில நூற்றாண்டுகளின் முன்னரே அங்கு தமிழ் இலக்கிய மரபு வளர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்பது தெளிவு என்பார் கலாநிதி க.செ. நடராஜா, தமிழ்க் கல்வி தமிழ்ப்புலமை சிறப்பாக நிலவியமையாலேயே இத்தகைய யாப்பு வடிவில் கல்வெட்டு அமைக்கப்பட்டிருக்கலாமென ஊகிப்பதும் தவறாகாது என்று கலாநிதி எஸ். சிவலிங்கராஜா குறிப்பிடுவர்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்குரியதெனக் கருதப்படும் பதவியாக் கல்வெட்டில்

''உத்தமர்தங் கோயில் வலகழி எனலும்
நித்த நியமம் நெறிவளர்
சித்தமுடன் சீரிளமை சேர்ந்த
பதியில் விளையாரம்ப பேரிளமை யார்த்துகள்
போதா வாயிரங் கொண்டுரைப்பார் திரு
சூத்தமாக முயன்றான் முயன்ற திரு.''

எனப் பொறிக்கப்பட்டிருக்கும் இணைக்குறளாசிரியப்பாவின் சிறப்பும் கி.பி. 13ஆம் நூற்றாண்டிற்குரியது எனக் கருதப்படும் பண்டுவஸ்நுவரக் கல்வெட்டில் வரும்.

''தென்னிலங்கைக்கோன் பராக்கிரமபாகு நிஸங்கமல்லற் கியாண்டஞ்சிற்
தினகரன் சுறவி வணைந்தவத்தையிலுத்திரட்டாதி யேழ் பக்கம்-
பொன்னவன் தின நற்சாத யோகத்தில் ஊர்தரு போதிமாதவர்தம்
பொற்பமர் கோயில் முனிவராலயந்தேனறந் திகழ் சாலையுஞ் - செயித்தம்
அன்னவை திகழ ஐவர் கண்டன் வனுபேரிலங்கை அதிகாரி அலகுதபுயன் தென்பராக்ரமன் மேனைச் செனெவி நாதன் திருப்பியரன்
மன்னிய சிறப்பில் மலிதருமழகாற் பராக்ரம அதிகாரிப் பிரிவுன வளர்தர அமைத்தான் ஸ்ரீபுரநகருள் மதிமான் பஞ்சரன் மகிழ்ந்தே.''

விருத்தப்பாவின் சிறப்பும் ஈழத்தின் தமிழ் இலக்கிய பாரம்பரிய வளர்ச்சியை வலியுறுத்துகின்றது.

சைவக் கோயிலைப் பாடும் ஈழத்து இலக்கியங்களுள் இன்று கிடைக்கும் ஈழத்தவரால் பாடப்பட்ட மிகத் தொன்மையான செய்யுளாக பதவியாச் செய்யுள் காணப்படுகின்றது. பௌத்த நிறுவனங்கள் எடுக்கப்பட்டதைக் கூறும் பண்டுவஸ்நுவரக் கல்வெட்டில் சோதிடக் கலைச்சொற்கள் காணப்படுகின்றன என பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுவர்.

யாழ்ப்பாண அரசின் படைகள் கேகாலை மாவட்டம் வரையிலே சென்று வெற்றியீட்டிய நிகழ்ச்சியைக் கூறும் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோட்டகம எனுமிடத்தில் உள்ள கல்வெட்டில் வரும்.

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர் வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் - பொங்கொலி நீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மட மாதர் தாம்.

என்ற செய்யுளின் வெண்பா யாப்பும் கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரை ஈழத்துத் தமிழ் மொழியினதும் இலக்கியத்தினதும் வளர்ச்சிப்படிகளின் முயற்சிகளை உணர்த்துகின்றன. இருப் பினும் ஆரியச் சக்கரவர்த்திகள் ஈழத்தில் ஆட்சியை அமைக்கும்

வரை அதற்கு முன்னுள்ள இலக்கிய வளர்ச்சியினை அறிய முடிய வில்லை. அதற்குப் பல காரணங்களைக் குறிப்பிட்டுக் காட்டலாம்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டுவரை ஈழத்தில் உறுதியற்ற அரசு நிலவி யிருக்கலாம். இதனால் அரச சபைகளிலே தமிழ் இலக்கிய முயற்சி களுக்கு ஆதரவில்லாத நிலை ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய சூழ்நிலை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியதனாலோ என்னவோ ஈழத்து இலக்கிய வளர்ச்சியினை அறியமுடியவில்லை.

கி.பி. 14ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் ஈழத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் வரலாற்றுப் பேண் முறையைப் பின்பற்றாது விட்ட மையும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை அறிய இயலாமைக்குக் காரணமாயிற்று எனலாம். தமிழ் நாட்டில் ஆட்சி செலுத்திய பல்லவ மன்னர்கள் வரலாற்றுப் பேண் முறையைப் பின்பற்றியது போன்று ஈழத்தில் பின்பற்றப்படாததனால் அக்கால ஈழத்துத் தமிழ் இலக்கிய முயற்சிகளை அறியமுடியாது போய் விட்டது.

ஈழத்துத் தமிழ்ப் புலவர் பெருமக்களால் பாடப்பட்ட இலக்கி யங்கள் பேணிப்பாதுகாக்கப்படாமையும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை அறிய இயலாமைக்குக் காரணம் எனலாம். ஈழத்துப் பூதன்தேவனார் பாடல்கள் தமிழ் நாட்டில் தொகுக்கப் பட்டுப் பேணப்பட்டதனால் இன்று கிடைத்திருக்கின்றது. அத்தகைய நிலை ஈழத்தில் இருக்கவில்லை எனலாம். தமிழ் நாட்டில் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலகட்டத்திலே ஈழத் திலே வாழ்ந்த தமிழ்ப்புலவர்களும் இலக்கியங்களை ஆக்கியிருப் பார்கள். இப்புலவர்களின் ஆக்கங்கள் தொகுப்போர், தொகுப்பிப்போர் இன்றி அழிந்தொழிந்திருக்கலாம் என கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது.

ஈழத்தில் கிடைத்துள்ள கி.பி. 9/10 ஆம் 12ஆம் 13ஆம் 14ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுக்களைக் கொண்டு நோக்கும்போது ஈழத்தில் செழுமைமிகு தமிழ் இலக்கியப் பாரம்பரியம் இருந்தது என்பது வலியுறுத்தப்படுகின்றது. கி.பி. 7ஆம் 8ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தோன்றிய பக்தி இயக்க

நாயன்மார்களாகிய சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்கள் மீது தோத்திரப்பாடல்கள் பாடியுள்ளனர். அவை தமிழ் நாட்டில் பேணப்பட்டு வந்தமையால் இன்று கிடைக்கின்றன. ஈழத்தில் பக்திப் பனுவல்கள் தோன்றாமல் விட்டமைக்கு மிக நீண்ட காலமாக பௌத்தமதச் செல்வாக்குக்கு உட்பட்ட ஈழத்தில் பௌத்தத்திற்கெதிரான தமிழ் நாட்டுப் பக்தியியக்கத்தினது செல்வாக்கு இலங்கைத்தமிழர் மத்தியில் சிறிதுசிறிதாகவே செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும் என பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுவர்.

நீண்டகால இடைவெளிக்குரிய தமிழ் இலக்கிய ஆக்கங்கள் இலங்கையிற் கிடைக்காமற் போனதற்கு இன்னுமோர் காரணத்தையும் குறிப்பிடுவர். சிங்கள இலக்கிய வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியான சாசனம் இடம்பெற்று வரும் ஆதி சிங்கள பாரம்பரியத்தில் கி.பி 13ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட இலக்கியங்கள் இன்று கிடைக்காமலிருக்கும் மர்மத்தை விளக்குவதாக தமிழர் முதலிய அந்நியப் படை எடுப்பின்போது அவை அழிந்தொழிந்து இருக்கவேண்டும் என்ற கருதுகோள் காலஞ்சென்ற பேராசிரியர் மலலசேகரா அவர்களினால் முன்வைக்கப்பட்டது. இக்கூற்று உண்மையெனக் கொள்ளப்பட்டால் இலங்கைத் தமிழர் ஆதிக்கம் அடக்கி ஒடுக்கப்பட்ட காலப்பகுதிகளில் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களும் அழிந்தொழிந்துபோயிருக்கலாம்எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுவர்.

இந்நிலையில் இருந்து விடுபட்டு யாழ்ப்பாணத் தமிழரசு ஏற்பட்ட பின்னரே தமிழ் நூல்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டு அதற்கேற்ற வசதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற மன்னர் குலத்தினர் செந்தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த செய்தியினை யாழ்ப்பாண வைபவமாலை கூறுவதால் அறியலாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்

ஈழத்துப் பூதந்தேவனார் காலமாகிய சங்க காலத்தை அடுத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இடம்பெறும் காலப்பகுதி ஆரியச் சக்கரவர்த்திகள் காலமாகும். கி.பி. 1216 - 1621 வரை உள்ளடக்கிய இக்காலப் பகுதி ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அடிக்கல் நாட்டப்பட்ட காலம் எனக் குறிப்பிடலாம். இக்காலப்பகுதியில் இடம்பெறும் பிரதான இலக்கிய முயற்சிகளாக

- வரலாறு சார்ந்த இலக்கியங்கள்
- அறிவியல் சார்ந்த இலக்கியங்கள் (சோதிடம், வைத்தியம்)
- சமயம் சார்ந்த இலக்கியங்கள்
- பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள்
- காப்பிய இலக்கியம்

என்பன தோற்றம் பெற்றன.

யாழ்ப்பாண வரலாற்று மூலங்கள் எனக் கொள்ளப்படும் வையாபுரி ஐயரின் வையாபாடல் முத்துக்கவிராயரின் கைலாயமாலை, கவிராயரின் கோணேசர் கல்வெட்டு என்பன குறிப்பிடத் தக்கனவாக அமைகின்றன. மேலும் இராசமுறை, பரராசசேகரன் உலா என்பன மறைந்து விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையை ஆண்ட மன்னர்களைப் பற்றியும், இலங்கைக்குப் பிற தேசங்களில் இருந்து குடிகள் வந்தேறிய முறை பற்றியும், ஈழத்தில் வன்னியர் குடியேற்றம் பற்றியும் பல தகவல்களைத்

தரும் நூலாக வையாபாடல் விளங்குகின்றது. இந்நூல் 104 விருத்தப்பாக்களைக் கொண்டு அமைகின்றது.

யாழ்ப்பாணத்து நல்லூரில் பிரபல்யம் பெற்றிருந்த கைலாசநாதர் கோவிலினை சிங்கையாரின் என்ற தமிழ் மன்னன் கட்டி பிரதிஷ்டை செய்த வரலாற்றையும் யாழ்ப்பாணத்து அரசர் களின் வரலாற்றையும் கூறும் நூலாக கைலாயமாலை திகழ் கின்றது. இது 310 கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பாவினால் அமைந்தது.

திருகோணமலையில் வீற்றிருக்கும் கோணேசர் ஆலய வரலாற் றினையும் குளக்கோட்டு மன்னனின் திருப்பணிகளையும் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களது வாழ்க்கைச் சித்திரிப்புக்களையும் விளக்கும் நூலாகக் கோணேசர் கல்வெட்டு விளங்குகின்றது. இலங்கையிலே தமிழில் தோன்றிய வரலாற்றுச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டுத் தனித்துவமுடையது என பேராசிரியர் சி. பத்மநாதன் குறிப்பிடுவர்.

ஆட்சியாளரின் பெயரால் அரசியல் ஒருமைப்பாடு காணும் பண்பிற்கு எடுத்துக்காட்டாக பரராசசேகரன் உலா அமைகின்றது என பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவர்.

குருநாகல் பகுதியிலுள்ள தம்பதெனியாவில் நான்காம் பராக்கிரமபாகு மன்னர் ஆட்சிக்காலத்தில் அவைக்களப் புலவ ரான தேனுவரைப் பெருமாள் என்று அழைக்கப்படும் போசராச பண்டிதரால் பாடப்பட்ட சரசோதிமாலை என்ற சோதிட நூலே ஈழத்தில் எழுந்த முதல் தமிழ் நூலாக விளங்குகின்றது. இது பன்னிரெண்டு படலங்களையும் 934 விருத்தப்பாக்களையும் உடையது. செய்தோனால், செய்வித்தோனால், பொருளால், இடத்தால், காலத்தால், செய்யுளால், செய்யுட் தொகையால் நூலுக்குப் பெயரிடும் முறையை மாற்றி ''புண்டரிகத்தார் மார்பன் புகழ்ச் சரசோதி மைந்தன்'' எனத் தன்னைத்தான் கூறும் நூலாசிரியர் தன் தந்தை பெயரால் நூலுக்குப் பெயரிட்டு புதுமையைப் புகுத்தியுள்ளார்.

சரசோதிமாலையின் பின் வந்த வடிவமாக அமையும் சோதிட நூலே சோமசன்மா என்பவரால் பாடப்பட்ட செகராசசேகர

மாலையாகும். இந்த நூல் ஒன்பது படலங்களையும் 290 விருத்தப்பாக்களையும் கொண்டு திகழ்கின்றது.

சோதிட நூல்களையடுத்து இடம்பெறும் அறிவியல் நூல்களாக வைத்திய நூல்கள் சிறப்புப் பெறுகின்றன. ஈழத்தில் முதலில் தோன்றிய வைத்திய நூலாகத் திகழ்வது **செகராசசேகரம்** ஆகும். இதன் ஆசிரியர் பெயர் அறியுமாறு இல்லை. இது ஆயுள் வேத மருத்துவ முறையைத் தழுவி எழுந்துள்ளது. இந்நூல் அந்தாதித் தொடையினாலும் விருத்தப்பாவினாலும், வெண்பாவினாலும் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலில் 1600 பாடல்கள் வரை பதிப்பிக்கப் பட்டுள்ளன.

செகராசசேகரத்தையடுத்து சிறப்பிடம் பெறும் ஈழத்து வைத்திய நூல் **பரராசசேகரம்** ஆகும். இந்நூல் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக் காலத்தில் கூட்டு முயற்சியாக இருந்திருக்கலாம் என பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுவர். இந்நூல் 8000 செய்யுட்களைக் கொண்டுள்ளது. முன்னர் 12000 செய்யுட்கள் கொண்டு விளங்கியது என்பர். தற்போது ஏழு பாகங்களாக அச்சிடப்பட்டுள்ளது. இதன் பதிப்பாசிரியர் ஏழாலை ஐ. பொன்னையாபிள்ளை ஆவர்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற சமய இலக்கியங்களாக **தட்சண கைலாய புராணம், திருக்கரசை புராணம், வியாக்கிரபாதபுராணம்** என்பன விளங்குகின்றன.

தட்சண கைலாய புராணம் திருகோணமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கோணேசப் பெருமானையும் மாதுமை அம்மையாரையும் சிறப்பித்துக் கூறுகின்றது. திருக்கோணேஸ்வரத்தின் தோற்றம், ஆதி வரலாறு என்பனவும் அதனோடு தொடர்புடைய வேறு சரிதங்களையும் கூறுகின்றது. இது வட மொழியில் உள்ள மச்சேந்திய புராணத்தைத் தழுவிச் செய்யப்பட்டது. இந்நூல் பாயிரம் நீங்கலாக 'ஏழு' சருக்கங் களையும் 620 விருத்தப்பாடல்களையும் உடையது. இந் நூலாசிரியர் பற்றிய கருத்து முரண்பாடு உள்ளது. இந்நூலை 1887ஆம் ஆண்டு சென்னையில் முதன்முலாகப் பதிப்பித்து வெளியிட்ட கா. சிதம்பர ஐயர் பதிப்பில் இந்நூல் யாழ்ப்பாணத்து மகாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன் இயற்றியது என்று

கூறப்பட்டுள்ளது. 1916ஆம் ஆண்டு பருத்தித்துறையில் பதிப்பித்து வெளியிட்ட பு.பொ. வைத்திலிங்க தேசிகர் பதிப்பில் ''பிரம்மஸ்ரீ பண்டிதராசர் அருளிச்செய்த ஸ்ரீ தட்சண கைலாய புராணம்'' என்று உரைக்கப்பட்டுள்ளது. இதனால் ஆக்கியோன் பெயரை அறுதியாகக் கூறுவது இயலாதுள்ளது. இது அந்தாதித் தொடையில் விருத்தப்பாவால் ஆக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு அருகில் மகாவலிகங்கைக் கரையில் கரசை என்னும் பதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் புகழை விரித்துக் கூறும் நூலாக திருக்கரசைப் புராணம் திகழ்கின்றது. ஈழத்தின் பெருமையினையும் மகாவலிகங்கையின் சிறப்பினையும் கூறுகின்றது. இந்நூலாசிரியரின் இயற்பெயர் அறியுமாறு இல்லை. இந்நூல் பாயிரம் நீங்கலாக 'நான்கு' சருக்கங்களையும் 170 விருத்தப்பாக்களையும் உடையது. வடமொழியில் சூத முனிவர் சொன்ன புராணத்தை தழுவிச் செய்யப்பட்டது என்பது பாயிரத்தின் பதின்மூன்றாவது செய்யுளால் அறிய முடிகின்றது.

அளவெட்டியைச் சேர்ந்த வைத்தியநாதத் தம்பிரான் அவர்கள் வடமொழியில் உள்ள வியாக்கிர பாத மான்மியத்தைத் தழுவி வியாக்கிர பாத புராணம் இயற்றியுள்ளார். இது அச்சுவாகனம் ஏறாமையால் கிடைக்கவில்லை. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தாம் எழுதிய தமிழ்ப்புலவர் சரித்திரம் எனும் நூலில் இரு பாடல்கள் அப்புராணத்துக்குரியதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் பற்றி மேலதிக தகவல்கள் பெறமுடியாதுள்ளது. இவ்விரு பாடல்களுள் ஒன்று விநாயகர் பற்றியும் மற்றையது சிவபெருமானைப் பற்றியும் கூறுகின்றது.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய பொதுமக்கள் சார்பு இலக்கியங்களில் விதந்து குறிப்பிடப்படுபவை **கதிரைமலைப்பள்ளும், கண்ணகி வழக்குரை** ஆகிய இரண்டுமாகும்.

ஈழத்தில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களுள் காலத்தால் முந்தியதாக **கதிரைமலைப்பள்ளு** விளங்குகின்றது. இந்நூல் 130 செய்யுட்களை உடையது. பள்ளுப் பிரபந்த இலக்கண மரபுக்கேற்ப

அமைந்துள்ளது. கதிர்காம முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைக்காரன் ஆகிய நான்கு சாதாரண பொதுமக்களே பாத்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். விருத்தப்பாவும்சந்தப்பாவும் கொண்டு ஆக்கப்பட்ட இந்நூலின் ஆசிரியர் யாரென அறியுமாறு இல்லை. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய ஏனைய இலக்கியங்களைப் போன்று மொழிபெயர்ப்பாகவோ தழுவல்களாகவோ அமையாது ஈழத்துக்கேயுரிய தனித்துவமான இலக்கியமாகவும் இந்நூல் திகழ்கின்றது.

ஈழத்தில் எழுந்த மற்றோர் பொது மக்கள் சார்பிலக்கியம் கண்ணகி வழக்குரையாகும். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் கதையினை பொதுமக்களுக்கேற்ற வகையில் சில நீக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் கண்ணகி வழக்குரை என்ற இதே பெயரில் கிழக்கு மாகாணத்திலும், கோவலனார் கதை என்று யாழ்ப்பாணத்திலும், சிலம்பு கூறல் என முல்லைத்தீவுப் பகுதியிலும் வழங்கப்படுகின்றது. இந்நூல் 'பதினைந்து' காதைகளையும் 2219 பாடல்களையும் கொண்டுள்ளது. அகவல், வெண்பா, சிந்து முதலிய யாப்புக்களைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் ''சகவீரன்'' எனக் குறிப்பிடப்படுகின்றார்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த முதற்காப்பிய இலக்கியமாகக் குறிப்பிடப்படுவது அரசகேசரியினால் ஆக்கப்பட்ட **இரகுவம்சமாகும்**. வடமொழியில் மகாகவி காளிதாசனால் எழுதப்பட்ட இரகுவம்சத்தின் தமிழாக்கமாகும். இந்நூல் பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொதுச்சிறப்புக் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளையும் இருபத்தாறு படலங்களையும் 2444 விருத்தப்பாக்களையும் உடையது. திலீப மகாராசர் காமதேனுவை வழிபட்டு இரகு என்பவனைப் புத்திரனாகப் பெற்ற கதையும், தசரதன் மகன் இராமன் கதையும், இராமன் மகன் குசன் கதையும் கூறப்படுகின்றன. இக்காப்பியத்தின் செய்யுள் நடை எளிதில் பொருள் உணர்ந்துகொள்ளமுடியாத சொல்நடை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியப் பண்புகள்

ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைக் கவனித்த பின்னர் அவ் இலக்கியங்கள் சுட்டுகின்ற பண்புகளை நோக்க வேண்டியது அவசியமாகும். ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களின் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப் பிடலாம்.

வடமொழி மொழி பெயர்ப்புக்களாக அமைதல்
மன்னர் புகழ் பாடுதல்.
செந்தமிழ்ப் பண்பு மிகுந்திருத்தல்.
விருத்தப்பா செல்வாக்குப் பெறுதல்.
பிரதேச உணர்வு வெளிப்படுதல்.
வரலாற்றுப் பேண்முறை வெளிப்படுதல்.
மதக் கருத்துக்களை வெளிப்படுத்தல்.
பொது மக்களின் இலக்கியத் தோற்றம் வெளிப்படல்.
காவியப் பண்பு காணப்படுதல்.
எளிதில் பொருளுணர முடியாத் தன்மை காணப்படுதல்.

என்பன போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன. வடமொழி மொழிபெயர்ப்புக்களாகவே ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்கள் விளங்குகின்றன. வட மொழியில் எழுதப்பட்ட சோதிட நூல்களை மொழிபெயர்த்தே சரசோதிமாலை,

செகராசசேகர மாலை என்னும் சோதிட நூல்கள் தோற்றம் பெற்றது என்பதை

"முன்னூ லுணர்ந்த முனிவோர்கள்
முதலோர் மொழிந்த சோதிடமாம்
பன்னூல் விளங்கும் பொருளதனைப்
பார்மே னிகழும் படியாக
வன்னூலுரைத்த நெறிவழுவா
தாராய்ந் தூசி நுழைவழியின்
மென்னூல் செல்லும் செயல்போலத்
தமிழ்நூ லிதனை விளம்பலுற்றேன்"

எனச் சரசோதி மாலைச் செய்யுளும்.

"வனைந்துமா முனிவோர் சொன்ன வடகலைச் சோதிடத்தைப்
புனைந்தென் கலையாற் சட்டை பூட்டிய விதனைக் கேட்டு
முனிந்திட வேண்டா நல்லோர் முற்றுமா ராய்ந்து குற்ற
நினைந்ததை யகற்றி நன்காய் நிச்சயத் திடுகை நீரே"

எனச் செகராசசேகர மாலைச் செய்யுளும் குறிப்பிடுகின்றன.

வட மொழியில் எழுந்த ஆயுள் வேத வைத்திய நூல்களை மொழிபெயர்த்தே செகராசசேகரம், பரராசசேகரம் ஆகிய வைத்திய நூல்கள் தோன்றின.

மணிதங்கு வரையு ளாதி
மன்னுயிர் படைத்த போது
பிணிதங்கு வகையு நோயின்
பேருடன் குணமுங் காட்டி
அணிதங்கு மருத்துங் காட்டு
மாயுரு வேதந் தன்னைக்
கணிதங்கு வகையால் வேதங்
கடந்தமா முனிவன் செய்தான்

எனவும்

செய்தவர் தமது நூலும்
தேர்ந்ததோர் தெரிப்பும் பாக்கிற்
பொய்தவம் புயர்ந்த பௌவம்
போலுமிங் கிதனை யாய்ந்து

வெய்தவ நோய்கள் தீர
விருத்தவந் தாதி யாகக்
கொய்தவ வொழுங்கிலே தான்
கோப்புறச் செப்பலுற்றாம்.

எனச் செகராசசேகர வைத்திய நூல் குறிப்பிடுகின்றது.

தன்வந்திரி என்பவரால் வடமொழியிற் செய்யப்பட்ட ஆயுள்வேத நூலைத் தழுவியே பரராசசேகரம் என்ற வைத்திய நூல் தோன்றியது என்பது

''தாரணியோர் மிகப்புகழ்தன் வந்திரி செய்த
தகவுடைய சீர்த்தி பெறு மாயுள் வேதப்
பேரணியும் வாகடத்தைப் பெரிது பேணிப்
பெட்புடைய தமிழ்ப்பாவாற் பேசும் வண்ணம்''

என்ற பரராசசேகர வைத்திய நூலில் வரும் பாயிரச் செய்யுளால் அறிய முடிகின்றது.

வடமொழியில் உள்ள மச்சேந்திய புராணத்தைத் தழுவி தட்சண கைலாயபுராணம் தோற்றம் பெற்றது என்பது

''மாதரவி லிறைஞ்சுகதை கயிலாய
புராணமென வறைய லுற்றேன்
மாதுரிய மச்சேந்திய வடபுராணத்
தியம்பு மருவத் தானே''

என வரும் தட்சண கைலாயபுராணப் பாயிரச் செய்யுள் கூறுகின்றது.

வடமொழியில் மகாகவி காளிதாசனால் இயற்றப்பட்ட இரகுவம்சக் காப்பியத்தையே அரசகேசரி மொழிபெயர்த்து இரகுவம்சத்தைப் பாடினார் என்பது,

''வன்றி சைக்காளி தாசன் வடமொழி
தென்றி சைத்தமி ழானனி செப்புகே''

என வரும் பாயிரச் செய்யுள் கூறுவதனால் அறிந்து கொள்ளலாம்.

பாராளும் மன்னர்களையும் அவர் தம் பெருமைகளையும் பாராட்டிச் செல்வது தமிழ் இலக்கியங்களின் பண்பாகும். இவ்

அம்சம் ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களில் தெளிவாகக் காணமுடிகின்றது.

''காமனுஞ் செங்கை வள்ளல் கதிரவன் மரபில் வந்தோன்
பாமாலை சூடு மீளிப் பராக்கிரம வாகு பூபன்''

எனப் பராக்கிரமபாகு மன்னனைச் சரசோதிமாலை புகழ்கின்றது.

''சந்தமுந் தருமநெறி கோடாத
தவப் பெருமான் றழைத்த கீர்த்திக்
கந்த மலை யாரியர்கோன் செகராச
சேகரமன் கங்கை நாடன்.''

எனச் செகராசசேகர மன்னனை செகராசசேகரமாலை குறிப்பிடு கின்றது.

முகவாதசன்னிக்கு மருந்து கூறுமிடத்தில்,

''திட்டமுறு வலிகளும் திகிலுற் றடங்கியே
செகராச சேகர என்றும்''

''சிங்கையாரியனை யெதிரொன்னார்க ளென்னவே
திசை கெட் டகன்று விடுமே''

எனவும் பாம்புக் கடிக்கு மருந்து கூறுமிடத்தில்,

''மிலங்குமணி முடிபுனையு மிலங்கை வேந்தர்
சீரிய பொன் நிறையளக்கச் செங்கோலோச்சுஞ்
செகராச சேகரமன் சிங்கை மேவு
ஆரியர்கோன் வெண்குடையினிழலே செய்யு''

எனவும் செகராசசேகர வைத்திய நூல் செகராசசேகர மன்னனை வழுத்துகின்றது.

பரராசசேகரம் என்ற வைத்தியநூல் சுரசூலைக்கு வைத்தியம் கூறுமிடத்தில், **''பாரின் மேவுதிற லரச னானபரராச சேகரனை''** எனவும் நயனரோகம் பற்றிய செய்யுளில், **''பார்மேவு மரசர்குல திலகமான பரராசசேகரன்''** எனவும்,

திரிபலைக் குழம்பு என்னும் செய்யுளில்

''பரராச சேகரன் பணித்த செங்கோல்
காத்தபுவி யோர்களிரு நீக்குமாபோற்
கண்ணினிரு ளீக்குமிது திண்ணந்தானே''

எனப் பரராசசேகர வைத்திய நூலை ஆக்குவித்தோனாகிய பரராச சேகர மன்னனைப் போற்றுவதைக் காணமுடிகின்றது.

தட்சண கைலாயபுராணம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்த செகராசசேகர மன்னனை **''செம்பொன்மா மௌலிச் சென்னிச் செகராசசேகரன்''** என திருநகரச் சிறப்பில் கூறுகின்றது.

கைலாயமாலை சிங்கையாரியச்சக்கரவர்த்திகளை விளிக்கும் போது,

''சீமான் செயவீரன் சித்தசனே ரொத்தமன்னன்
கோமானெனும் சிங்கையாரியர் கோன்''

என்று போற்றுவதும் குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது.

வையாபாடலில்,

''மன்னனான இளவலெனும் சங்கிலியை''

என்று சங்கிலி மன்னனையும்

''மன்னனான விரவி குல பரராசசேகரன்''

என்று பரராசசேகர மன்னனையும்

''கந்தமலி தாரிளவல் செகராச சேகரன்''

என செகராசசேகர மன்னனையும் பாராட்டுவதனைக் குறிப் பிட்டுக் காட்டலாம்.

ICUTS

ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களின் சிறப்பம்சம் செந்தமிழ்ப் பண்பு மிகுந்திருத்தலாகும். இக்காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் வடமொழி மொழிபெயர்ப்புக்களாகவும் தழுவல்களாகவும் அமைந்தாலும் இவ் இலக்கியங்கள் அனைத் திலும் செந்தமிழ்ச் சொற்கள் சீர்பெற்று வருவதனைச் சிறப்பாக குறிப்பிடலாம். தண்டமிழ் விருத்தப்பாவாற் சரசோதி மாலை செய்த போசராச பண்டிதர்

''நாவினா லுலகோர் போற்றும் நற்கதிர்ப்பரிதியுச்சி
மேவினாற் குற்றம் யாவும் மிகுந்திட ரெய்து மேலும்
பாவினாற் புனைந்த செஞ்சொல்''

என தமிழ் நூல் விளங்கப் புவி மீதுதெழுந்த சரசோதி மாலையின் செந்தமிழ்ப் பண்பினைக் குறிப்பிடலாம். பைந்தமிழ் விருத்திப் பாவால் ஆகிய செகராசசேகர வைத்திய நூலில்

''மனிதங்கு வரையுளாதி மன்னுயிர் படைத்த போது
பிணி தங்கு வகையு நோயின் பேருடன் குணமுங் காட்டி''

என செந்தமிழ்ச் சொற்கள் விரவி வருவதும் கவனிக்கத்தக்கது.

வட மொழிப் புராணத்தை தழுவி தமிழில் தோன்றிய தட்சண கைலாய புராணத்தில் வரும்

''சிந்தை நீ சிந்தையிற் றெளியும் சோதி நீ
யெந்தை நீ யாயுநீ யெங்கட் காவி நீ''

என்ற செய்யுள்ளடிகளில் செந்தமிழ் நடை சிறப்பாக அமைதலைக் குறிப்பிடலாம்.

''சொல்லுற்ற சீர்க் குளக்கோட்டு மன்னன் சொல்லிய
சொற்படியே கல்வெட்டுப் பாடெனப் பாடினன்''

எனக் கோணேசர் கல்வெட்டிலும் பொது மக்கள் சார்பிலக்கியம் எனப் போற்றப்படும் கோவலனார் கதையில் வரும்

''இட்டமுடன் கண்ணகியார் இனிய மணம் முடிப்பதற்கு
பட்டணத்தில் உள்ளவர்க்கும்
பல திசையில் உள்ளவர்க்கும்''

என்னும் அடிகளிலும்

''நஞ்சு போல் விழி மங்கையர் கூடி
நயங்கள் பேசியிசை பாடியாடி பஞ்சு போலடி மெல்ல
நடந்து பணைத்த கொங்கை கனத்திடை தொய்ய''

என்னும் அடிகளிலும் வரும் செந்தமிழ்ச் சொற்களையும் குறிப்பிடலாம்.

''பதிபசு பாசம் மூன்றும் பகர்ந்திடிலனாதியாகும்''

என பரராசசேகரத்திலும்

''கயற்பிறங்கின பிறங்கின செங்கமலம்''

என வடமொழியின் மொழிபெயர்ப்பாகிய இரகுவம்சத்திலும்

''தக்கபல வளமும் சார்ந்து கல்வி
நாகரிக மிக்க திருநெல்வேலி''

எனக் கைலாய மாலையிலும்

"சோதியோர் வடிவமாகிச் சுடர்தொழச் சுடர்சேர் பொன்னின்"
என வியாக்கிரபாத புராணத்திலும்

"திருவள ரிலங்கையின் சீரை யோதிட
வொருபொரு ளென்னவே யுலகம் யாவையும்"

என வையா பாடலிலும் செந்தமிழ்ச் சொற்கள் சிறப்பாகக் கையாளப்பட்டு இருப்பதனைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

சோழர்கால இலக்கியங்களில் செல்வாக்குப் பெற்ற விருத்தப்பா ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களிலும் செல்வாக்குப் பெற்றுள்ளது.

"தண்டமிழ் விருத்தப்பாவாற் சரசோதி மாலை செய்தான்"
எனவும்

"பைந்தமிழ் விருத்தப்பாவாலோரை நூல் பகரலுற்றான்"
எனவும் வரும் சரசோதிமாலைச் செய்யுள் வரிகளும்

"தென்கலையாற் றருகவென வருள்புரிய விருத்தப்பாவாற் செகராசசேகரமாலை செய்தான்"
எனவரும் செகராச சேகரமாலைச் செய்யுள் வரிகளும்,

"வெய்தவ நோய்கள் தீர விருத்த வந்தாதியாக"
என செகராசசேகர வைத்திய நூலும்,

"மாரமுத விருத்தக் கவியறு நூற்று முப்பானைந் தளவேயாக"
என தட்சண கைலாயபுராணமும்

"மிக்க திரும் வடபாடைப் புராணத்தைத் தென்கலையின் விருத்தப்பாவிற்"
எனத் திருக்கரசைப் புராணமும் குறிப்பிடுவது ஆரியச்சக்கரவர்த்திகள் கால விருத்தப்பாவின் உயர் செல்வாக்கைக் காட்டுகின்றது. மேலும் பரராசசேகரம், கோணேசர் கல்வெட்டு என்பன விருத்தப் பாவால் ஆக்கப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை தவிர கண்ணகி வழக்குரை அகவல், சிந்து, வெண்பா முதலிய யாப்புக்களால் ஆனதும் கதிரைமலைப்பள்ளு விருத்தப்பா, சந்தப்பா என்பவற்றால் ஆக்கப்பட்டதும் கைலாயமாலை கலிப்பாவால் ஆக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தம் பிரதேசத்தையும் அப்பிரதேசத்தின் இயற்கை வர்ணனைகளையும் கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும் சித்திரிப்பது இலக்கியங்களின் பொதுப் பண்பாகும். இவ்வம்சம் ஈழத்து இலக்கியங்களிலும் சிறப்பாக இடம் பெற்றிருக்கின்றன.

"வரையெலா மாரம்மாரம் வனமெலா நன்கார் நன்கார்
நிரையெலாஞ் சாலிசாலி நிலையெலாங் கன்னல் கன்னல்
தரையெலா நீலநீலந் தடமெலா நாறு நாறுங்
கரையெலா மன்ன மன்னங் கடலெலா மீழம் மீழம்."

எனவும்

"பொலங்கொ ழீழமும் பொன்மலை போலுமே"

எனத் தட்சண கைலாய புராணமும்

"வாரிவளஞ் சூழ் இலங்கை" எனவும் "புகழ் இலங்கை"
"மகாவிலங்கை" என கோணேசர் கல்வெட்டிலும்

"தண்ணமர் சாலி முத்தும் தடங்கட லிப்பி முத்தும்
வண்ணவெண் பனில முத்தும் வரையறா வோல முத்தும்
கண்ணமர் கரும்பின் முத்துங் ககனமஞ் சீன்ற முத்தும்
வெண்ணில வில்லாப் போது மிகு நிலாக் கொழிக்கு மன்றே"

எனத் திருக்கரசைப் புராணமும்

"வேணிச் சங்கரர் தொண்டர்க ளென்று
வீடு தோறும் மிரப்பவர்க்கெல்லாம்
மாணிக்க மள்ளிப் பிச்சை கொடுத்திடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே"

என கதிரை மலைப் பள்ளிலும்

"பண்பு செறி தக்க பலவளமும் சார்ந்து
கல்வி நாகரிகம் மிக்க திருநெல்வேலி"

என்று திருநெல்வேலியின் சிறப்பினையும்

"கன்னல் செறிவளை கமுகு புடை சூழ்கழனி
துன்னு மிணுவில் துலங்க வைத்து"

என இணுவிலின் சிறப்பினைக் கைலாயமாலை கூறுவதனையும் சுட்டிக் காட்டலாம்.

வரலாற்றுச் சார்பு பேணப்பட்டமை ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களில் விதந்து குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இவ்வகையில் வரலாற்று நூல்களாகக் கொள்ளப்படும் வையா பாடல், கைலாயமாலை ஆகிய நூல்கள் எழுச்சி பெற்றன.

''இலங்கை மாநகர் அரசு இயற்றிடு அரசன் தன்
குலங்கள் ஆனதும் குடிகள் வந்திடும் முறைதானும்''

எனவும்

''இலங்கையின் மண்டலத் தோர்தன் கதையை
நலம்பெறு தமிழினா னடியோதினான்''

என வையா பாடலிலும்

''தேரிலங்கு குளக் கோட்டன் என்னும் இராசன்
நாற்கால் மண்டபத்திருந்தே எண்ணினான்''

என குளக்கோட்ட மன்னனின் திருப்பணியையும்

''பொழுது குலக் கயவாகு ராஜராஜன்
பூசைவிதிக் கேகனக நாடு மீந்து''

என கயபாகு மன்னனின் பணியினையும் இவை போன்ற இன்னும் பலவுமான வரலாறு சார்ந்த கருத்துக்களை கோணேசர் கல்வெட்டிலும் தெளிவாகக் காணமுடிகின்றது. நல்லூரில் சிங்கையாரியன் கைலாசநாதர் கோவிலைக் கட்டிய வரலாற்றை விரிவாகவும் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்த அரசர் வரலாற்றைச் சுருக்கமாகவும் கூறும் கைலாயமாலை மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலைக்கும் பிற்கால யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதிய பலருக்கும் முதன் நூலாக அமைந்தது என டாக்டர் க.செ. நடராசா குறிப்பிடுவர்.

ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களில் சமயச்சார்பு தெளிவாக வெளிப்படுகின்றது. சமய நூல்களாக தட்சண கைலாய புராணம் திருக்கரசைப்புராணம் என்பன எழுந்தாலும் இக்கால இலக்கியங்கள் இந்துமதக் கடவுளருக்கு முதல் வணக்கம் செலுத்தும் முறையைப் பின்பற்றியுள்ளன. சரசோதிமாலை ஆசிரியர் திருமாலைப் போற்றியிருப்பதும், செகராசசேகர

மாலை விநாயகர், சிவபெருமான், விஷ்ணு, சரஸ்வதி ஆகிய தெய்வங்களை வழுத்தியிருப்பதும், பரராசசேகரம் விநாயகர், சுப்பிரமணியர், சரஸ்வதி ஆகியோரைத் துதித்திருப்பதும் தட்சண கைலாய புராணம் கோணேசப்பெருமானைப் போற்றியிருப் பதும், திருக்கரசைப்புராணம் சிவனை போற்றிப் பரவியிருப் பதனையும் குறிப்பிட்டுக் காட்டலாம்.

அரசரையும் வள்ளலையும் கடவுளையும் கடவுள் தம் மெய்யடி யாரையும் பாராட்டிச் சென்ற தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் சாதாரண பொதுமக்களுக்கு முதன்மை கொடுக்கும் நிலை நாயக்கர் காலத்திலே தோன்றிய முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி ஆகிய இலக்கியங்களிலே உதயமாயிற்று. இப்பண்பு ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே தோன்றிய கதிரைமலைப் பள்ளிலும், கோவலனார் கதையிலும் வெளிப்படுகின்றன. கதிரைமலைப் பள்ளில் பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைக்காரன் போன்ற சாதாரண பொதுமக்களே சித்திரிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டலாம்.

ஆரியச் சக்கர்வர்த்திகள் கால இலக்கியங்கள் பிற நூல்களின் தழுவல்களாகவே அமைந்துள்ளன. கோவலனார் கதை என்னும் நூல் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தின் தழுவல் போன்று அமைந்து உள்ளதனால் அதைப்போலவே இதுவும் காப்பிய அமைப்புப்பெற்று விளங்குகின்றது. எனக் கலாநிதி க.செ. நடராசா குறிப்பிடுவர். இரகுவம்சம் வடமொழிக் காப்பியத் தின் தமிழ் மொழிபெயர்ப்பாக அமைந்ததனால் இக் காப்பியத் தின் பண்பு அரசகேசரியினது இரகுவம்சத்திலும் பிரதிபலிப்பதாக அமைகின்றது என்று குறிப்பிடலாம்.

நாயக்கர் காலத்தில் காணப்பட்ட எளிதில் பொருள் உணர்ந்து கொள்ள முடியாத தன்மையினைப் பெற்ற ஈழத்து இலக்கியமாக அரசகேசரியினது இரகுவம்சம் விளங்குகின்றது. சொல்லணி, பொருளணி முதலியன நிரம்பப் பெற்று அரிதாகப் பொருள் உணரக்கூடியதாக சொற்றொடர் பெற்று விளங்கும் காப்பிய நடையின் தன்மைக்கு எடுத்துக்காட்டாக

''பண்ணிசைப் பரவை யொன்று பாடகர் பரவை யொன்று
நன்நடர் பரவை யொன்று நாவலர் பரவை யொன்றே
கின்னரப் பரவை யொன்று கீத யாழ்ப்பரவை யொன்றங்
கின்னியப் பரவை தானொன் றிவற்றினும் பரவை யேழே''

என வரும் பாடலைச் சுட்டிக் காட்டலாம்.

போர்த்துக்கேயர் காலம்

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தையடுத்து ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறும் காலப்பகுதி போர்த்துக்கேயர் காலமாகும். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த கி.பி. 1505 முதல் கி.பி. 1658 வரையுள்ள 153 ஆண்டுகளை உள்ளடக்கியதாக இக்காலப்பகுதி விளங்குகின்றது. இக்காலத்தே தோற்றம் பெற்ற இலக்கியங்களாக ஞானப்பள்ளு, அர்ச்சயாகப்பர் அம்மானை, ஞானாநந்தபுராணம் முதலிய கத்தோலிக்க மத நூல்கள் விளங்குகின்றன.

போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க இலக்கியமாக அமைவது ஞானப்பள்ளு ஆகும். இயேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு கத்தோலிக்க மதத்தைப் போற்றியும் புகழ்ந்தும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு பள்ளுப் பிரபந்த இலக்கணத்திற்கமைய ஆக்கப்பட்டுள்ளது. ஞானப்பள்ளுப் பிரபந்தத்தில் இடம்பெறும் பாத்திரங்களாகிய மூத்தபள்ளி, பள்ளன் ஆகிய இருவரும் கிறிஸ்துநாதரின் பிறப்பிடமாகிய ஜெருசலேம் நாட்டவராகவும் இளைய பள்ளி கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீடமான றோமாபுரி நாட்டவராகவும் பண்ணைக்காரன் றோமாபுரி என்னும் பண்ணைக்கு உரிமையாளனாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். இப்பள்ளுப் பிரபந்தம் சிந்து, கலிப்பா, விருத்தப்பா, வெண்பா ஆகிய யாப்புக்களால்

ஆக்கப்பட்டு 257 செய்யுட்கள் உடைய நூலாக விளங்குகின்றது. இதனைப் பாடிய ஆசிரியர் யாரென அறியுமாறில்லை. இந்நூல் வேதப்பள்ளு என்றும் அழைக்கப்படுகின்றது. இது கி.பி. 1642 ஆம் ஆண்டு தோன்றியது என்பர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.

போர்த்துக்கேயர் காலத்தில் தோன்றிய மற்றோர் இலக்கியம் அர்ச்சயாகப்பர் அம்மானையாகும். யாழ்ப்பாணத்தில் பச்சிலைப் பள்ளிப் பற்றில் கிளாலி என்னும் இடத்தில் கோயில் கொண்ட யாக்கோப்பு என்னும் சந்யேம்ஸ் என்ற கிறிஸ்தவப் புனிதர் பேரில் எழுந்ததாகும். இந்நூல் பொதுப்பாயிரம், முடிவுரை நீங்கலாக 53 பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. நூலின் முற்பகுதியிலும், பிற்பகுதியிலும் கோயில் வரலாறு கூறப்பட்டுள்ளது கி.பி. 1647 ஆம் ஆண்டு கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் பாடப்பட்டதாகப் பாயிரம் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் தெல்லிப்பளையைச் சேர்ந்த பேதுருப் புலவர் ஆவார். இந்நூல் விருத்தப்பாவால் ஆக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளையைச் சேர்ந்த தொம்பிலிப்பு அவர்களால் தொம் தியோகு முதலியின் விருப்பப்படி கிறிஸ்தவ மத விளக்கமாகிய ஞானாநந்த புராணம் பாடப்பட்டது. இப்புராணம் 1104 விருத்தப் பாக்களால் ஆனது. இந்நூலின் காலம் பற்றிய கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. இதனால் இதனது காலம் பற்றித் தெளிவாகக் கூறமுடியாதுள்ளது.

போர்த்துக்கேயர் கால இலக்கியப் பண்புகள்

போர்த்துக்கேயர் கால இலக்கியங்களைக் கொண்டு அவை சுட்டுகின்ற இலக்கியப் பண்புகளைக் கவனிக்கும்போது போர்த்துக்கேயர் கால இலக்கியங்களில் வட சொற்கள் விரவி வருதலைக் காணமுடிகின்றது. அண்டகோளம், ரூபலங்காரம், ஏகமாகி, திரித்துவமாகி, ஜெகத்தில் போன்றனவும் இன்னும் பலவுமான வடசொற்கள் ஞானப்பள்ளிலும் ஆரியர் கோத்திரத் தோன், அந்தமுடன், இரத்தினம், சூரியன் போன்றன வும் இன்னும் பலவுமான வட சொற்கள் அர்ச்சயாகப்பர் அம்மானை யிலும் இடம்பெற்றிருப்பதனை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட லாம்.

பேச்சு வழக்குச் சொற்களை கையாளும் போக்கு போர்த்துக் கேயர் கால இலக்கியங்களிலே உலா வருவது குறிப்பிடத்தக்க தாகும். ''துண்ட வெண்பிறைச் சூரியனும் மண்ணும் தோற்றவே'' எனவும் ''அண்டர் நாதன் திருத்தோளிலே வைத்து'' எனவும் ''தெருவு நீள நிழல் கொண்டு'' எனவும் ''தெருக்கள் மீது அழுது முன் சென்ற'' எனவும் ஞானப்பள்ளி லும் ''இக் கதையைப் பாடியது என்னுடைய ஆசிரியன்'' எனவும் ''மாணிக்கச் செப்பே வயிர மணிவிளக்கே'' எனவும் ''ஆராரோ ஆராரோ அன்பனே பள்ளி கொள்ளாய்'' எனவும் ''சன்னாசிமார்கள் சலிப்பின்றி இங்கு

வந்து'' எனவும் ''பன்னு தமிழ்ப் பாடும் பாவலர்கள் வாழியவே'' எனவும் ''கொன்றாலும் விட்டாலும்'' எனவும் அர்ச்சயாகப்பர் அம்மானையில் வரும் சொற்களையும் குறிப்பிடலாம்.

போர்த்துக்கேயர் காலத்தில் செந்தமிழ், கொடுந்தமிழ் என தமிழ் வேறுபாடு மக்களால் உணரப்பட்டிருந்தமை அக்கால இலக்கியங் கள் மூலம் தெரிய வருகின்றது. ''செந்தமிழாற் பள்ளினிசை தேனுலகிற் பாடுதற்கு'' என ஞானப்பள்ளிலும் ''செந்தமிழைப் புன்றமிழாற் செப்பத்துணிந்து கொண்டு'' என்றும் ''கீர்த்தியுள்ள செந்தமிழாற் கிளத்தினார் இக்கதையை'' எனவும் ''செந்தமிழினா லறிய செப்பினார் யாவருக்கும்'' எனவும் அர்ச்சயாகப்பர் அம்மானையில் வரும் அடிகளை நோக்கும்போது செந்தமிழ், கொடுந்தமிழ் வேறுபாடு புலனாகின்றது.

கத்தோலிக்க மதப்பிரச்சாரமாக அமைதல் போர்த்துக்கேயர்கால இலக்கியங்களின் சிறப்பம்சமாகின்றது. ''சீருக்குகந்த திரித்துவ ஏகனைச் சிந்திப்பவர் ஆருக்கு முந்திப் பரலோக நன்மை யடைவார்களே'' எனவும் ''ஏகநாதன் பிறந்தே வளர்ந்து எமக்கே வேண்டி இறந்தே வுயிர்த்து'' என ஞானப்பள்ளிலும்

''பாதகத்தை விட்டொதுங்கி பராபரனை நெஞ்சில் வைத்து தீதற்று உலகர் கதி சேர்ந்தென்றும் வாழியவே'' என அர்ச்சயாகப்பர் அம்மானையும் குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டலாம்.

போர்த்துக்கேயர் கால இலக்கியங்கள் கத்தோலிக்க மதப் பிரச்சார இலக்கிங்களாக அமைந்ததனால் அவ்விலக்கியங்களில் கூறப்படும் கத்தோலிக்க மதக் கருத்துக்களும் கத்தோலிக்கப் புனிதத் தலங்களின் வர்ணனைகளும் ''ஜெருசலேம்'' ''றோமாபுரி'' ஆகிய மேலைத்தேசங்களைப் பற்றியே சித்திரித் துள்ளன. ''தேவலோகந் திறந்து முன்காட்டும் ஜெருசலைத் திரு நாடெங்கள் நாடே'' என ஜெருசல நாட்டின் சிறப்பினை மூத்தபள்ளியும் ''ஊற்றுலாவு கருணை விளங்கும் றோமாபுரி நாடெங்கள் நாடே'' என றோமாபுரியின் சிறப்பினை இளைய பள்ளியும் குறிப்பிடுவதனைச் சுட்டிக் காட்டலாம்.

பண்ணைத் தோன்றிய எண் நான்கு கிழவியும் எனத் தொல்காப் பியரினால் விதந்து கூறப்பட்ட சாதாரண நாட்டார் இலக்கிய வடிவங்களைக் கொண்டு விளங்குதல் போர்த்துக்கேயர் கால இலக்கியங்களின் சிறப்பாகும். மணிவாசகரால் பக்தி இலக்கியத் திற்கு பயன்படுத்தப்பட்ட அம்மானை என்ற வடிவம் ஈழத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் பேதுருப்புலவரால் அர்ச் யாகப்பர் அம்மானை பாடுதற்குப் பயன்படுத்தப்பட்டது. அம்மானை நாட்டார் இலக்கிய வடிவமாக அமைவதால் இனிய ஓசையும், விழுமிய நடையுமுடையதாக விளங்குகின்றது.

போர்த்துக்கேயர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் ஈழத்திற்குரிய தேசியப்பண்புகள் இடம் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மேலைத் தேசத்தின் மதமாகிய கத்தோலிக்க மதக் கருத்துக்களையும் மேலைத்தேச மக்களின் வாழ்க்கை முறை களையும் சித்தரிப்பதால் ஈழநாட்டுக்குரிய தேசியக் கருத்துக்கள் இடம்பெற முடியாது போய்விட்டது எனலாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலமும் போர்த்துக்கேயர் காலமும் ஒப்பு நோக்கு

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தையும் போர்த்துக்கேயர் காலத்தினையும் ஒப்பிட்டு நோக்குவதற்கு அவ்விரு காலங் களிலும் தோன்றிய இலக்கியங்களே சான்று ஆகும். ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களாக சோதிடம், மருத்துவம், வரலாறு, சமயம், பள்ளு முதலானவை குறிப்பிடப்படுகின்றன. போர்த்துக்கேயர் கால இலக்கியங்கள் கத்தோலிக்க மதத்தினைப் பிரச்சாரம் செய்யும் மத நூல்களாக விளங்குகின்றன.

ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்கள் இந்துமதம் சார்ந்த தெய்வங்களாகிய திருமால், சிவன், விநாயகர், முருகன், சரஸ்வதி, முதலான தெய்வங்களையே போற்றுகின்றன. ''மருவெழுங்கமல மீது நடந்தருள் மகிமையானை'' என சரசோதிமாலையும் ''நாரணனைப் பயோதியினனந்தலைவா'' என செகராசசேகர மாலை என்பன திருமாலையும், ''சிவனருளுமைங் கரத்தாலுலக மெலாம்'' என விநாயகரை செகராசசேகர மாலையும் ''சங்கரனை பிறை வேணிப் பிணையிருங்கை'' எனச் சிவனையும் ''அயன் நாவிற் புக்கிருப்பாள்'' எனச் சரஸ்வதியையும் செகராசசேகர மாலை குறிப்பிடுவதனைச் சுட்டலாம். போர்த்துக்கேயர் கால இலக்கியங்கள் இயேசுநாதரையும் சந்யேம்ஸ் என்ற கத்தோலிக்கப்

புனிதரையும் பாராட்டியுள்ளன. ''புவியோர்கள் தமக்காய் ஜெருசலேமிற் சுமந்த சிலுவையை'' என ஞானப்பள்ளு இயேசு நாதர் சிலுவை சுமந்ததையும் ''முந்திய யாக்கோப்பு முத்தருக்கு முன் பிறந்த சந்தியாகின் கதையை'' என அர்ச்யாகப்பர் அம்மானையும் குறிப்பிடுகின்றன. எனவே இவ்விரு காலங் களிலும் தோன்றிய இலக்கியங்கள் மத ரீதியாக வேறுபடுகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய கதிரைமலைப் பள்ளு என்ற பிரபந்தத்தைப் பின்பற்றி போர்த்துக்கேயர் காலத்தில் ஞானப்பள்ளுப் பிரபந்தம் தோன்றியிருக்கலாம். பள்ளுப் பிரபந்த இலக்கிய வடிவம் இவ்விரு காலப்பகுதியில் தோன்றினாலும் கதிரைமலைப்பள்ளின் பொருள் மரபும் ஞானப்பள்ளின் பொருள் மரபும் வேறுபாடு உடையது. கதிரைமலைப்பள்ளு கதிர்காம முருகனைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு மகாவலி கங்கை என்ற ஈழத்துச் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டது என்பதனை ''கானந்திகழ் கதிரையில் நிகழெதிர் காலங்களினருள் செயுமுருகன் பள்ளினிசை பாடவே'' என்ற பாடல் வரிகளினால் அறியலாம். கதிரைமலைப்பள்ளில் மகாவலிகங்கைப் பள்ளி மூலமாக ஈழத்தின் தேசியக் கருத்துக்களை ''மணி கொணர்ந்து மணிவிளக்கேற்றிடும்'' எனவும் ''மாணிக்க மள்ளிப் பிச்சை கொடுத்திடும்'' எனவும் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்க தாகும். ஞானப்பள்ளு இயேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு கத்தோலிக்க மதத்தைப் பிரச்சாரம் செய்து பாடப்பட்டத னால் ஞானப்பள்ளில் நாட்டுவளம் கூறும் பள்ளியர் ஈழத்தைப் பற்றிச் சிந்திக்காது ஜெருசலத்தையும் றோமாபுரியையுமே புகழ்ந்துள்ளமையை 'செங்கைமேவியகம்பு துளிர்த்த ஜெருசலை' எனவும் ''முற்ற நீதியகலாதிறையீன்ற றோமாபுரி'' எனவும் குறிப்பிட்டுள்ளமையை சுட்டிக்காட்டலாம். ஆரியச் சக்கரவர்த்தி கள் கால இலக்கியங்களில் தேசியப் பண்புகள் மிகுந்து விளங்க போர்த்துக்கேயர் கால இலக்கியங்கள் கிறிஸ்தவ மதப் போதனை களையும் மேல்நாட்டு மக்களின் வாழ்க்கை முறைமைகளையுமே சித்திரிக்கின்றன எனப் பேராசிரியர் ஆ. சதாசிவம் குறிப்பிடுவர்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தே தோற்றம் பெற்ற புராணம் என்னும் இலக்கிய வடிவம் போர்த்துக்கேயர் காலத்திலும்

தோற்றம் பெற்றுள்ளது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் கோணேசர் பெருமானையும் மாதுமையம்மையாரின் புகழையும் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்த தட்சணகைலாய புராணத்தைப் பின்பற்றி போர்த்துக்கேயர் காலத்தில் தொம்பிலிப்பு என்ற புலவர் கிறிஸ்தவ மத விளக்கமாக விளங்கும் ஞானாநந்த புராணத்தை ஆக்கியுள்ளார்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் ஆலய வரலாறும் அவ் ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனது பெருமை யினையும் சித்திரிப்பதாக தட்சணகைலாய புராணம், திருக்கரசைப் புராணம், கோணேசர் கல்வெட்டு என்பன தோற்றம் பெற்றுள்ளன. இவ்விலக்கியங்களை அடியொற்றியே போர்த்துக் கேயர் காலத்தில் பச்சிலைப்பள்ளிப் பற்றில் கிளாலியில் கோயில் கொண்ட யாக்கோப்பு என்னும் பெயரில் விளங்கும் சந்யேம்ஸ் என்ற புனிதரையும் ஆலய வரலாற்றையும் கூறும் அர்ச்யாகப்பர் அம்மானை எழுந்திருக்கலாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இருந்த மன்னர் புகழ்பாடும் தன்மை போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த ஞானப்பள்ளுப் பிரபந்தத்தில் வரும் குயிற் சிந்துப் பகுதியில் உள்ள

''பேரான பாராளும் பிடுத்துக்கால் மறுவென்றன்
பிறதானம் வீசவே கூவாய் குயிலே''

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தே கையாளப்பட்ட விருத்தப்பா, அகவல் சிந்து முதலிய யாப்பு வகைகள் போர்த்துக்கேயர் கால இலக்கியங்களிலும் வெளிப்படுகின்றன.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த தழுவல் இலக்கிய ஆக்கங்கள் தொடர்ந்து செல்வது குறிப்பிடத்தக்கதாகும். அர்ச்யாக்கப்பர் அம்மானையின் கதை இவ்வாசிரியருக்கு முன்னரும் தமிழிற் பாடப்பட்டிருக்கின்றது என்பது

''பாண்டிக் கரையதனிற் பரதர்கள் கோத்திரர்கள்
வேண்டு சந்தியோகு கதை விருத்தப்பா வாயுரைத்தார்''

என இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் இந்நூலாசிரியரே கூறுவதனால் அறியமுடிகின்றது.

ஒல்லாந்தர் காலம்

போர்த்துக்கேயர் காலத்தையடுத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறும் காலப்பகுதி ஒல்லாந்தர் காலமாகும். கி.பி. 1658 - 1796 வரை 138 ஆண்டுகளை உள்ளடக்கிய இக்காலப் பகுதியில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ இலக்கியங்களும் இந்துமதம் சார்ந்த இலக்கியங்களாகவும் ஏறத்தாழ இருபது இலக்கியங்கள் வரை தோற்றம் பெற்றுள்ளன. ஒல்லாந்தர் காலத்து இலக்கியங் களைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

காவியம்	-	திருச்செல்வர் காவியம்
புராணம்	-	சிவராத்திரி புராணம், ஏகாதசிப்புராணம், பிள்ளையார் கதை, யோசேப்பு புராணம்
தூது	-	கிள்ளைவிடு தூது, பஞ்ச வண்ணத்தூது
அம்மானை	-	திருச்செல்வர் அம்மானை
காதல்	-	வெருகல் சித்திரவேலாயுதர் காதல்
அந்தாதி	-	கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, புலியூரந்தாதி
கோவை	-	கரவைவேலன் கோவை
பள்ளு	-	பறாளாய் விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு
பதிகம்	-	இணுவில் சிவகாமி அம்மைப் பதிகம்

ஊஞ்சல்	-	வட்டுக்கோட்டை பத்ரகாளி அம்மை ஊஞ்சல்
துதி	-	இணுவில் சிவகாமி அம்மை துதி
பிள்ளைத் தமிழ்	-	இணுவில் சிவகாமி அம்மை பிள்ளைத்தமிழ்
வரலாறு	-	யாழ்ப்பாண வைபவமாலை
நாடகம்	-	அலங்காரரூபன் மலையநந்தினி, அதிரூபாவதி வாளபிமன், நொண்டி நாடகம், அனிருத்தன் நாடகம்
விளக்க நூல்	-	காசியாத்திரை விளக்கம்
மருத்துவம்	-	அமுதாகரம்
சோதிடம்	-	சந்தான தீபிகை

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இலக்கியங்களுள் காவியம் குறிப்பிடத்தக்கதாகும். காப்பிய இலக்கியத்துக்கான இலக்கண நெறிமுறைக்குட்பட்டு தமிழ் மரபோடு ஒத்துப்போகக் கூடிய வாறு அமையும் திருச்செல்வர் காவியம் இக்காலத்திற்குரிய தாகும். சிந்து தேசக் கதையொன்றின் தமிழாக்கமாக அமையும் இக்காவியம் கிறிஸ்தவ மதப் பெரியாராகிய திருச்செல்வராயன் என்பவரின் உயர்வு பற்றி எடுத்துக் கூறுகின்றது. இக்காப்பியம் காப்புச் செய்யுள் ஒன்றும், பாயிரம் 34 பாடல்களும், 24 படலங் களில் 1912 பாடல்களுமாக மொத்தம் 1947 விருத்தப் பாக்களை யுடையது. இக்காவியத்தைப் பாடிய ஆசிரியர் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் வசித்த பூலோகசிங்க முதலியார் என்று அழைக்கப்படுகின்ற அருளப்ப நாவலர் அவர்களாவார்.

ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய மற்றோர் இலக்கிய வகை புராணங்கள் ஆகும். இந்து மதப் புராணங்களாகிய சிவராத்திரி புராணம், ஏகாதசிப்புராணம், பிள்ளையார் கதை என்பனவும் கிறிஸ்தவ மதப் புராணமாகிய யோசேப்பு புராணமும் இக்காலத்தில் தோன்றியவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

சிவராத்திரி விரதத்தின் தோற்றத்தையும் அதனை நோற்றிடும் வகையினையும் சிவராத்திரி விரதத்தினால் பலனடைந்தவர்களின் கதையினையும் கூறும் சிவராத்திரிப் புராணம் காப்புச் செய்யுள்

ஒன்றினையும், கடவுள் வாழ்த்துப் பாக்கள் இருபதினையும், பாயிரச் செய்யுள் மூன்றினையும், ஒன்பது சருக்கங்களில் 691 பாடல்களையும் உடையது. இதைப் பாடிய ஆசிரியர் வரத பண்டிதர் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

திருமால் விரதங்களுள் சிறந்ததாகிய ஏகாதசி விரத நிர்ணயத்தையும் இவ்விரதம் அனுஷ்டித்தோர் சரிதங்களையும் கூறும் ஏகாதசிப் புராணம் காப்புச் செய்யுள் ஒன்றினையும், கடவுள் வாழ்த்துப்பாடல் ஐந்தினையும், அவையடக்கச் செய்யுள் ஒன்றினையும், மூன்று சருக்கங்களில் 258 விருத்தப்பாடல்களையுமுடையது. இதுவும் வரத பண்டிதரால் ஆக்கப்பட்டது.

ஆனைமுகன் (பிள்ளையார்) பிறந்த வரலாறு, அவன் கயமுகாசுரனை அழித்து மூஷிகத்தை வாகனமாக்கியதும், ஆவணிச் சதுர்த்தி விரதச் சிறப்பும், மார்கழி விநாயக சஷ்டி விரத மகிமையும் கூறுவது பிள்ளையார் கதையாகும். இது அகவற்பாவினால் ஆக்கப்பட்டது.

கிறிஸ்தவ மதப் புராணமாக அமைவது யோசேப்பு புராணமாகும். அர்ச்சியேட்டர் யோசேப்புவின் வரலாற்றினைக் கூறுகின்றது. இப்புராணத்தில் இருபத்தொரு படலங்களும் 1023 பாடல்களும் உடையதெனக் கூறப்படுகின்றது. இதன் ஆசிரியர் கூழங்கைத் தம்பிரான் எனக் குறிப்பிடப்படுகின்றார். இப்புராணம் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. சைமன்காசிச் செட்டி எடுத்துக் காட்டியுள்ள ஆற்றுப் படலத்தில் இடம்பெறும் ஐந்து பாடல்களே இன்று கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த மற்றோர் இலக்கிய வடிவம் தூதுப்பிரபந்தமாகும். காங்கேசன்துறையில் உள்ள கண்ணியவளை என்னுமிடத்தில் எழுந்தருளி இருக்கும் குருநாதசுவாமி மீது வரதபண்டிதரால் பாடப்பட்ட கிள்ளைவிடு தூது இக்காலத்தில் எழுந்ததாகும் 216 கண்ணிகளைக் கொண்ட இத்தூதுப்பிரபந்தம் கண்ணகி அம்மனின் கோபத்தினாலுண்டாகும் அம்மை நோய் முதலியவற்றை நீக்கவென உருவெடுத்த குருநாதர் பவனிவரக் கண்ட பெண்ணொருத்தி அவர் மேலுற்ற காதலினைத் தன்கிளி

மூலம் சொல்லியனுப்பி குருநாதர் மலையை வாங்கிவா எனத் தூது விடுத்து குருநாதசுவாமியின் சிறப்பினைக் கூறுவதாக அமைந்துள்ளது.

இணுவையூர் இளந்தாரி என்ற கைலாயநாதன் மீது பாடப்பட்ட தூதுப் பிரபந்தமே பஞ்ச வண்ணத்தூதாகும். இயற்றமிழும் நாடகத்தமிழும் விரவிவரச் செய்யப்பட்டதாக அமையும் இத்தூதுப் பிரபந்தத்தில் கைலாயநாதன் இணுவையில் வீதி உலா வந்ததும் சந்திரமோகினி என்ற பெண் அவனைக் கண்டு காதல் கொண்டு வெண்ணிலா, கிளி, அன்னம், தென்றல், தோழி என்பனவற்றைத் தூது அனுப்பியதும் கைலாயநாதன் அவளை மணந்துகொள்ளச் சம்மதிப்பதாகத் தோழியிடம் சொல்லியனுப்பியதும் கூறப்பட்டுள்ளது. பிள்ளையார், சிவகாமியம்மை, சுப்பிரமணியக் கடவுள், வைரவர், பத்திரை ஆகியோருக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது. இதனை ஆக்கியோர் இணுவில் சின்னத்தம்பிப் புலவர் ஆவார்.

திருச்செல்வர் காப்பியத்தின் கதையும் அமைப்பும் அம்மானை வடிவில் பாடப்பட்டதால் திருச்செல்வர் அம்மானை என அழைக்கப்படுகின்றது. திருச்செல்வர் காவியத்தைப் பாடிய பூலோகசிங்க முதலியாரே திருச்செல்வர் அம்மானையும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒல்லாந்தர் காலத்திலே தோன்றிய காதல் இலக்கியமாக வெருகல் சித்திரவேலாயுதர் காதல் விளங்குகின்றது. திருகோண மலைக்குத் தெற்கேயுள்ள வெருகல் பகுதியில் கோயில் கொண்டருளியிருக்கும் சித்திரவேலாயுத சுவாமி மீது பாடப்பட்டதாகும். சித்திரவேலாயுதர் வீதியுலா வந்ததும் அவரைப் பார்த்து அவர் மீது காதல் கொள்வதாகவும் கொண்டு பாடப்பட்டுள்ளது. இது 421 கண்ணிகளையுடையது. இதனை அருளியவர் தம்பலகாமம் வீரக்கோன் முதலியாராவார்.

அந்தாதி இலக்கிய வடிவமும் ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்றதனை நல்லூர் சின்னத்தம்பிப்புலவரின் கல்வளையந்தாதி, மறைசை அந்தாதி என்பனவும் மயில்வாகனப்புலவரின் புலியூரந்தாதியும் புலப்படுத்துகின்றன. யாழ்ப்பாணம்

சண்டிலிப்பாயிலுள்ள கல்வளைப்பகுதியில் எழுந்தருளியுள்ள விநாயகர் மீது பாடப்பட்ட அந்தாதி நூலே கல்வளையந்தாதி யாகும் கட்டளைக் கலித்துறை யாப்பினால் ஆக்கப்பட்டது. நூற்றந்தாதி இலக்கணத்துக்கமைய நூறு செய்யுட்களையுடையது.

திருமறைக்காடு எனப்படும் வேதாரணியத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வேதாரணியேசுவரர் மீது பாடப் பட்டது. கட்டளைக் கலித்துறையாப்பினால் செய்யப்பட்ட திரிபந்தாதியாக விளங்குகின்றது. திருமறைக்காடரைப் புகழ்ந்து அவரை வணங்கி மக்கள் ஈடேற்றம் அடையலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிதம்பரேஸ்வரப் பெருமானைப் போற்றிப் பாடப்பட்ட நூலே புலியூரந்தாதி யாகும். கடவுள் வாழ்த்து நீங்கலாக நூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களைக் கொண்டு நூற்றந்தாதியாகவும், யமக அந்தாதி யாகவும் விளங்குகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய கோவை இலக்கியமாக கரவை வேலன் கோவை விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தின் கரவெட்டிக் கிராமத்தில் வாழ்ந்த சேது நிலைப்பட்ட மாப்பாண முதலியார் மகன் வேலாயுதபிள்ளையைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. வேலாயுதபிள்ளையின் புகழைக் கூறுவ தாக அமையும் கரவைவேலன் கோவை 425 கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் கொண்டு விளங்கியது என்பர். இதனைப் பாடிய ஆசிரியர் நல்லூர் சின்னத்தம்பிப்புலவர்.

பிரபந்த வகைகளுள் ஒன்றாகிய பள்ளுப்பிரபந்தமும் ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம்பெற்றது. பறாளாய் விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு என்பன இக்காலத்தில் தோன்றின. சுழிபுரம் பகுதியில் உள்ள பறாளாய் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானை பாட்டுடைத் தலைவராக கொண்டு பாடப்பட்டது, பறாளாய் விநாயகர் பள்ளுப் பிரபந்தமாகும். பள்ளுப் பிரபந்த இலக்கணத்துக்கு அமைய மூத்த பள்ளி, இளையபள்ளி, பள்ளன், பணக்காரன் ஆகிய நான்கு பாத்திரங்களைக் கொண்டு பறாளாய் விநாயகரின் பெருமை

தோன்ற சிந்து, விருத்தம், கலிப்பா ஆகிய பாவைகளால் செய்யப் பட்டது. மூத்தபள்ளி ஈழமண்டலப் பள்ளியாகவும் இளைய பள்ளியை சோழமண்டலப் பள்ளியாகவும் சித்திரித்து ஈழநாட்டுப் பெருமையையும் சோழநாட்டுப் பெருமையையும் கூறப்படு கின்றது. 130 பாடல்களைக் கொண்டு விளங்கும் பறாளை விநாயகர்பள்ளைப் பாடியவர் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்.

காரைக்காட்டிலிருந்து தெல்லிப்பழையில் வந்து குடியேறிய கனகராய முதலியாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு மாவிட்டபுரம் சின்னக்குட்டிப் புலவரால் பாடப்பட்ட பள்ளுப் பிரபந்தமே தண்டிகைக் கனகராயன் பள்ளுப் பிரபந்தமாகும். பள்ளுப்பிரபந்த இலக்கணத்துக்கமைய மூத்தபள்ளி, இளைய பள்ளி, பள்ளன், பண்ணைக்காரன் ஆகிய நான்கு பாத்திரங்களே இடம்பெறுகின்றன. இதில் வரும் மூத்தபள்ளி வடகாரைப் பள்ளி யாகவும் இளையபள்ளி தென்காரைப் பள்ளியாகவும் சித்திரிக்கப் பட்டு வடகாரை வளமும் தென்காரை வளமும் கூறப்படுகின்றது. இது 153 பாடல்களை உடையது.

பதிகம் என்னும் இலக்கிய வடிவமும் ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்றது. இணுவிலில் எழுந்தருளியிருக்கும் சிவகாமியம்மை மீது பாடப்பட்டது. இதனைச் சிவகாமி அம்மை துதி எனவும், சிவகாமி அம்மை பிள்ளைத் தமிழ் எனவும் கூறுவர். இணுவைச் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டது. இது பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆன பத்துச் செய்யுட்களையுடையது.

ஊஞ்சற் பதிகமும் ஒல்லாந்தர் காலத்தில் தோன்றியது. வட்டுக் கோட்டைப் பிட்டியம்பதி பத்திரகாளியம்மை மீது கணபதி ஐயரால் பாடப்பட்ட ஊஞ்சற் பதிகம் குறிப்பிடத்தக்கதாகும். பத்ரகாளி அம்மனின் புகழ் கூறி ஆடீரூஞ்சல் எனப் பாடப்பட்டு அம்மனுக்குரிய நிவேதனப் பொருட்களையும் குறிப்பிடுகின்றது. இப்பதிகம் எண்சீர் விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்ட பத்துச் செய்யுட்களை உடையது.

வரலாற்று நூலாகக் கொள்ளப்படும் மாதகல் மயில்வாகனப் புலவரால் வசன நடையில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலை ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்றமை கவனிக்கத் தக்கது.

நாடக இலக்கியத் துறையிலும் ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சியினைக் காணமுடிகின்றது. வட்டுக்கோட்டை கணபதி ஐயரின் அலங்காரரூபன் நாடகம், அதிரூபாவதி நாடகம், மலையந்தினி, வாளபிமன் நாடகங்களும் இணுவைச் சின்னத்தம்பி புலவரின் நொண்டி நாடகம், கோவலன் நாடகம், அனிருத்தன் நாடகம் என்பனவும் குறிப்பிடத்தக்கன.

விளக்க நூல் என்ற வகையில் மாதகல் மயில்வாகனப் புலவரின் காசி யாத்திரை விளக்கம் குறிப்பிடப்படுகின்றது. அந்நூல் அழிந்து விட்டமையால் அதனைப் பற்றிய விளக்கம் அறியுமாறில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வரத பண்டிதரால் ஆக்கப்பட்ட விஷ வைத்திய நூலாகிய அமுதாகரம் இக்காலத்தில் தோன்றியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சோதிட நூல் என்ற வகையில் இல்லறத்தோர்க்கு இன்றியமையாத சந்தான பலனை இனிதியிம்பும் வடமொழிச் சந்தான தீபிகையை தமிழில் மொழிபெயர்த்துப் பாடப்பட்ட சந்தான தீபிகையை அராலி இராமலிங்க முனிவர் இக்காலத்திலேயே ஆக்கியுள்ளார்.

ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகள்

ஒல்லாந்தர் கால இலக்கியங்களைக் கவனித்த பின்னர் அவ்விலக்கியங்கள் சுட்டும் இலக்கியப் பண்புகளை விரிவாக நோக்கலாம். ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் சமயப்பிரச்சார வாகனமாக அமைந்துள்ளன. போர்த்துக்கேயர் காலத்தில் விதைக் கப்பட்ட கத்தோலிக்கம் ஒல்லாந்தர் காலச் சமயப் பிரச்சாரத்தால் வேரூன்றி வளர்ந்து சிறப்புப் பெற்றது எனலாம். போர்த்துக்கேயர் காலத்தைவிட ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய மதச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பவற்றால் இந்துமதப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது கத்தோலிக்க மதத்தை பிரச்சாரம் செய்வதாக திருச்செல்லவர் காவியம், யோசேப்பு புராணம் திருச்செல்வர் அம்மானை என்பனவும் இந்து மதத்தைப் பிரச்சாரம் செய்வதாக சிவராத்திரி புரர்ணம் கிள்ளைவிடு தூது, ஏகாதசிப் புராணம், வெருகல் சித்திரவேலாயுதர்காதல், பறாளாய் விநாயகர்பள்ளு போன்ற இலக்கியங்களை விதந்து குறிப்பிட்டுக் காட்டலாம்.

நாயக்கர் கால இலக்கியங்களின் பண்பாகிய சமய சார்பு, தத்துவச் சார்பு, பழமை போற்றும் பண்பு என்பன ஒல்லாந்தர் கால இலக்கியங்களிலும் இடம் பிடிக்கின்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் இந்து மத ஆசார அனுஷ்டானங்களுக்குத்

தடை விதித்தும் இந்து ஆலயங்கள் இடித்தழித்துக் கொடுமைப் படுத்திய சூழ்நிலையே இருந்தது. இச்சூழ்நிலையில் தமிழகத்தில் இந்து மத நிறுவனங்களாகிய மடாலயம், ஆதீனம் என்பன மத வளர்ச்சிப் பணிகளுக்கு உதவியது போன்று ஈழத்தில் எவ்வித தாபனங்களும் உதவவில்லை. இச்சூழ்நிலையில் சமய வாழ் விலும் ஆலய வழிபாட்டிலும் நம்பிக்கை கொண்டு தளரா உள்ளத்தோடு மக்கள் உறுதியுடன் விளங்கியதால் இக்காலத்தில் தோன்றிய இந்து மதம் சார்ந்த இலக்கியங்கள் இந்து மக்களின் தேவையைப் பூர்த்திசெய்தன. இவற்றின் மூலம் ஆலயங்கள் எழுப்பப்பட்டு நித்திய பூசைகளும் விரதனுஷ்டானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்து மக்கள் சமயக் கருத்துக்களையும் தத்துவக் கருத்துக்களையும் தெரிந்துகொள்ளும் முகமாக இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

அந்தாதி இலக்கிய வடிவம் செல்வாக்குப் பெற்றமை ஒல்லாந்தர் கால இலக்கியங்களின் சிறப்பம்சம் ஆகும். நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி என்பனவும் மாதகல் மயில்வாகனப் புலவரின் புலியூர் அந்தாதி யும் ஈழத்தில் அந்தாதி இலக்கியத்தின் செல்வாக்கைக் காட்டு கின்றது. ஈழத்துப் புலவர்கள் அந்தாதி பாடுவதில் கைதேர்ந்தவர் கள் என்பதனை உலகுக்கு காட்டுவதாகவும் அமைந்துள்ளன என பேராசிரியர் ஆ. சதாசிவம் குறிப்பிடுவர். இவ்வந்தாதிகள் கடவுள் மீது பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொது மக்கள் சார்பான இலக்கியங்கள் தோற்றம் பெற்ற மையும் ஒல்லாந்தர் காலத்திற்குரிய தனித்துவமாகும். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலும், போர்த்துகேயர் காலத்திலும் சமய இலக்கிய நோக்கில் அமைந்த பள்ளுப் பிரபந்தம் ஒல்லாந்தர் காலத்தில் மக்களைப் பாடுவதாயிற்று. காரைக்காட்டிலிருந்து வந்து குடியேறிய கனகராய முதலியாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சின்னக்குட்டிப் புலவரால் பாடப்பட்ட தண்டிகைக் கனகராயன் பள்ளு பொதுமக்கள்சார் இலக்கியமாக இக்காலத்தில் தோன்றியது. கரவெட்டியில் வாழ்ந்த வேலாயுத பிள்ளையைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட கரவைவேலன் கோவை என்ற கோவைப் பிரபந்தமும் பொதுமக்கள் இலக்கியமாக விளங்குகின்றது.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் தொடக்கம் ஈழத்து இலக்கியங்களில் மலிந்து காணப்பட்ட வடமொழிச் செல்வாக்கு ஒல்லாந்தர் காலத்தில் அருகிக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். ஒல்லாந்தர் காலத் தமிழ்ப் புலவர்கள் சொந்தக் கற்பனையாற்றலின் உதவி கொண்டு இலக்கியம் படைத்தனரேயன்றி மொழிபெயர்த்து இலக்கியம் படைக்க விரும்பினரல்லர். இதனால் பழைய செந்தமிழ்ச் சொற்கள் ஒல்லாந்தர் கால இலக்கியங்களிலே வாழ்வு பெறுவதனை சின்னத்தம்பிப்புலவர் போன்றவர்களின் பாடல்களில் தெளிவாக அறிய முடிகின்றது. உதாரணமாக

''மஞ்சளாவிய மாடங்கள் தோறும்
மயில்கள் போல் மடவார் கணஞ் சூழ''

எனப் பறாளாய் விநாயகர் பள்ளிலும்

''தென்னிலங்கை இராவணனைச் செய்யவிர லூன்றிப்
பின்னவன்ற னின்னிசையைப் பெட்புடனே கேட்டு வந்து''

என சித்திரவேலாயுதர் காதலில் வரும் பாடல்களைச் சுட்டிக் காட்டலாம். தமிழகப் புலவர்கள் வடமொழி ஆதிக்கத்தின் தீமையை உணரும் முன் ஈழத்துப் புலவர்கள் உணர்ந்து விட்டனர் என பேராசிரியர் ஆ. சாதாசிவம் குறிப்பிடுவர்.

சமயப் பொதுமை பேணப்பட்டமை ஒல்லாந்தர் கால இலக்கியங்களின் சிறப்பம்சமாகும். கூழங்கைத் தம்பிரானால் ஆக்கப்பட்ட ஜோசேப்பு புராணம், சித்திர விநாயகர் திருவிரட்டை மணிமாலை, நல்லைக் கலிவெண்பா என்பன எம்மதமும் சம்மதமே என்ற தன்மையைக் காட்டுகின்றது.

வரலாற்றுச் சார்பைக் கொண்டிருத்தல் என்ற அம்சமும் ஒல்லாந்தர் கால இலக்கியங்களில் இடம்பெறுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் தமிழ்ப்புலவர் பரம்பரை இருந்தமை கண்டே மாதகல் மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலை என்ற வரலாற்று நூலை வசன நடையில் எழுதினார். இவ்வம்சம் வசன இலக்கியம் தோன்றிய காலம் ஒல்லாந்தர் காலம் என்ற சிறப்பினையும் ஏற்படுத்துவதாயிற்று.

பல்துறை இலக்கிய வடிவம் தோற்றம் பெற்றமையும் ஒல்லாந்தர் காலத்திற்குரிய தனித்துவமாகும். காவியம், புராணம், தூது, அம்மானை, காதல், அந்தாதி, கோவை, பள்ளு, பதிகம், ஊஞ்சல், வரலாறு, நாடகம், விளக்க நூல், மருத்துவம், சோதிடம் முதலிய பல்வகை இலக்கியங்களும் வளர்ச்சியடைந்த காலம் ஒல்லாந்தர் காலமாகும்.

நாடக இலக்கிய வளர்ச்சி தோற்றம் பெற்ற காலம் ஒல்லாந்தர் காலமாகும். அலங்காரரூப நாடகம், மலையநந்தினி நாடகம், அதிரூபவதி நாடகம், வாளபிமன் நாடகம், நொண்டி நாடகம், அனிருத்தன் நாடகம் முதலிய நாடக இலக்கியங்கள் வளர்ச்சி யடைந்தமை முக்கிய அம்சமாக விளங்குகின்றது.

19ஆம் நூற்றாண்டு

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலத்தை யடுத்து இடம்பெறும் காலப்பகுதி ஆங்கிலேயர் காலமாகும். கி.பி. 1796 - 1948 வரையுள்ள 153 ஆண்டுகளை உள்ளடக்கிய காலப் பகுதியாகும். ஆங்கிலேயர் காலம் 19ஆம் நூற்றாண்டையும் 20ஆம் நூற்றாண்டின் முன்னரைக் காலப் பகுதியையும் உள்ளடக்கியதாக இருப்பினும் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை கொண்டு நோக்கும்போது ஈழத்தின் அரசியல், பொருளாதாரம், கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களின் அடிப்படையில் 19ஆம் நூற்றாண்டு தனித்து நோக்கப்பட வேண்டியதாகின்றது.

1796 ஆம் ஆண்டு இலங்கை ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டு 1802 ஆம் ஆண்டு முடிக்குரிய குடியேற்ற நாடாகியது. 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியமும் ஆங்கிலேயர் வசமாகியது. பல நூற்றாண்டுகளாகத் தனித்தனி இராச்சியமாக இருந்த ஈழத்துப் பிரதேசங்கள் ஆங்கிலேயராலேயே ஒரே இராச்சியமாக ஆளப் பட்டது. 1833 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் திட்ட முன்மொழிவின் மூலம் அரசியல் அதிகாரம் படிப்படியாக இலங்கை மக்களின் கையில் வரத்தொடங்கியது. பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. வணிகத்துறை வளர்ச்சியடைந்தது. நாடு முழுவதும் புகையிரதப் பாதைகளும் தெருவீதிகளும் அமைக்கப்பட்டன. ஆட்சியாளரின் நிர்வாக கடமைக்கு நாட்டு மக்கள் தேவைப்பட்டனர். ஆங்கிலக்கல்வி

பரவலாக்கப்பட்டது. நகரங்களில் ஆங்கிலப் பாடசாலைகள் உதயமாகின. கிறிஸ்தவ மதக் குழுவினரின் மதப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. கல்வி, நாகரிகம், உடை நலுங்கா உத்தியோகம் முதலியவை மக்களின் மனதைக் கவர்ந்தன. மரபுவழிக் கல்வி முறையில் மாற்றம் புகுந்து நிறுவனக்கல்வி முறை தோற்றம் பெற்று வளர்ந்தது. இச்சூழ்நிலையில் படித்த மத்திய தரவர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர். மக்கள் தம் பொருளாதார வளத்தை விருத்தி செய்யவும் அரசாங்கத்தில் உயர் பதவிகள், அந்தஸ்துக்கள், சலுகைகள் பெறவும் கிறிஸ்தவராக மதம் மாறினர். இச் சூழ்நிலையே 19ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கியக் களத்தின் அடித்தளமாக அமைந்தது.

19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் இலக்கியம் வளர்ச்சி அடைந்தமைக்கான காரணங்கள்

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஆங்கிலேயரின் ஆட்சி குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வணிக நோக்குடனும் மதம் பரப்புவதற்காகவும் வந்த ஆங்கிலேயர் படிப்படியாக ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் தம் ஆட்சியில் மருத்துவமனைகள், ஏழை விடுதிகள், கல்விக்கூடங்கள் முதலியவற்றை நிறுவி மக்களுக்கு தொண்டுகள் புரிந்தனர். இவர்களின் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களும், ஆங்கிலக் கல்வியும் ஈழத்து தமிழ் மக்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தியது. அதன் விளைவாக தமிழ் மொழி வளர்ச்சியடைந்தது.

ஆங்கிலேயர் ஈழத்தில் கல்வியைப் பரவலாக்கினார்கள். மரபு வழிக் கல்விமுறை விஸ்தரிக்கப்பட்டது. கிராமம் தோறும் பாடசாலைகளை நிறுவினர். உயர் வகுப்பினரிடத்தும் செல்வம் மிகுந்தோரிடமும் தனியுடமையாக இருந்த கல்வி பொது உடமையாக மாறியது. சமுதாய ஏற்றத்தாழ்வினை நீக்கி சமூகத்தின் சகல வகுப்பினரும் எழுத்தறிவு பெற உதவினர். மக்களை மதம் மாற்றவும் கிறிஸ்தவ மதக் கருத்துக்களை படித்தறிந்து கொள்ளவும் தமது ஆட்சிக்கேற்ற அலுவலர்களை

ஆக்கிக் கொள்ளவும் கல்வி விருத்தி மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய கல்விப் பரவலாக்கம் மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்த படித்த மத்தியதர வர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர். ஆங்கிலக் கல்வி பயின்று அம்மொழியில் பாண்டித் தியம் பெற்ற தமிழர் ஆங்கில மொழியில் உள்ள இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், அகராதி முதலியவற்றை தமிழில் புகுத்த விரும்பினர். அதன் விளைவாக ஈழத்திலும் ஆங்கில இலக்கியப் போக்குகளும் வளர்ச்சிகளும் இடம்பெறலாயின.

19ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதப்பிரச்சாரமும் கிறிஸ்தவத்திற்கெதிரான இந்து மதப் பிரச்சாரமும் மேற்கொள்ளப் பட்டன. கிறிஸ்தவ மிசனரிமார் கிறிஸ்தவ மதத்தை பிரச்சாரம் செய்யும் நோக்கில் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், கிறிஸ்தவ மத விளக்க நூல்கள் என்பனவற்றை வெளியிட்டனர்.

இதே முறையினை இந்துக்களும் இந்து மதப் பிரச்சாரத்திற்குக் கையாண்டனர். இஸ்லாமியரும் தமது மதக் கருத்துக்களை விளக்குவதற்கு இத்தகைய வழிமுறையினைக் கையாண்டனர். இந்த நிகழ்ச்சியால் ஈழத்துத் தமிழ்மொழி வளர்ச்சியடைந்தது.

19ஆம் நூற்றாண்டில் தமிழ்மொழிக்கு கிடைத்த மிகப் பெரிய அதிஸ்டங்களில் ஒன்று அச்சுப் பொறி கிடைத்தமையாகும். ஆங்கிலேயர் தமது மதத்தைப் பரப்புவதற்கும் அஞ்ஞானிகளை நல்வழிப்படுத்தவும், அச்சில் தமிழ் நூல்களை வெளியிட்டனர். ''ஐரோப்பியர் வருகையால் அச்சியந்திரம் வராதிருக்குமேயானால் அனேகமான தமிழ் நூல்களை இன்று நாம் கண்டிருக்க முடியாது'' என மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடுவர். அச்சியந்திரப் பயன்பாட்டிற்கு கடதாசியின் உபயோகம் உறுதுணை புரிய ஓலையில் உறங்கிய தமிழ்மொழி கடதாசியில் உலா வரத் தொடங்கியது. இவ்வம்சம் தமிழ்மொழியின் பரவலான வளர்ச்சிக்குப் பசுமையான தீனியாகியது.

ஆங்கிலேயர் வருகையால் ஈழத்துத் தமிழ்மொழி உரைநடை வளர்ச்சியிலும் ஏற்ற மிகு வளர்ச்சியைப் பெற்று புதுப்பொலி வுடன் திகழ்ந்தது. அரசியல், சமூகம், பொருளாதார மாற்றங் களும், கல்வி, அச்சியந்திரம் முதலிய சாதனங்களும்

உரைநடைக்கு உந்துதல் அளித்தன. வசன நடை கைவந்த வல்லாளர் என வீ.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும் தற்கால உரைநடையின் தந்தையென பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்களாலும் பாராட்டப்பட்ட ஆறுமுக நாவலர் உரைநடை வளர்ச்சிக்கு உரமூட்டினார். தமிழ் உரைநடை எழுந்து நடக்கத் தொடங்கியது. 19ம் நூற்றாண்டிலேயே எனப் பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிடுவதும் நோக்குதற்குரியது. உரைநடை வளர்ச்சியின் மூலம் பத்திரிகைத்துறை, கண்டன நூல்கள், சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், நாவல், சிறுகதை, அகராதி, பதிப்புத்துறை போன்ற இன்னோரன்ன பல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்த ஈழத்தில் தமிழ்மொழி பல்துறை வளர்ச்சியைப் பெற்றது.

19ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருந்தொகையான தமிழ் இலக்கியங்கள் சமயப் பிரச்சார நோக்கம் உடையதாகவே இருந்துள்ளன. கிறிஸ்தவ மதப் பிரச்சாரமும் அதற்கு எதிரான இந்து மதப் பிரச்சார முயற்சிகளும் கற்றோரை மட்டுமன்றி மற்றோரையும் எட்டும்படி அவை சம்பந்தமான இலக்கிய ஆக்கங்களை உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இவ்வகையில் தெய்வங்கள் மீதும் தெய்வங்கள் உறையும் திருத்தலங்கள் மீதும் பாடப்பட்ட இலக்கியங்களே பெருந் தொகையாகத் தோற்றம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. 19ஆம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பானது புராணங்கள், சிற்றிலக்கியங்கள், இலக்கண நூல்கள், தத்துவ நூல்கள், கண்டன நூல்கள், நாடக நூல்கள், அகராதித்துறை மொழிபெயர்ப்புத் துறை, வசன நூல்கள், வரலாற்று நூல்கள், அறிவியல் துறை, பத்திரிகைத்துறை எனப் பல் துறைகளிலும் புதுப்பொலிவுடன் புகழ்பூத்து விளங்குவதனை அக்கால இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

பழமையான செய்திகளையும், நிகழ்வுகளையும் கூறுவது புராணம் ஆகும். புராணம் இலக்கியங்கள் பல இக்காலத்தே தோற்றம் பெற்றுள்ளன. வல்வை வயித்திலிங்கம் பிள்ளையின் சாதி நிர்ணய புராணம், சபாபதி நாவலரின் சிதம்பர சபாநாத

புராணம், மாதகல் ஏரம்பஐயரின் நகுலாசல புராணம், அளவெட்டி கனகசபைப் புலவரின் கிறிஸ்தவ புராணமாகிய திருவாக்குப் புராணம், புலவர் சுப்பையனாரின் கனகிபுராணம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஈழத்துப் புலவர்களால் சிறப்பாகக் கையாளப்பட்ட சிற்றிலக்கியங்களில் ஒன்று ஊஞ்சல் ஆகும். "ஆசிரிய விருத்தப்பாவாலோ அல்லது கலித்தாழிசையாலோ பொலிதருங்கிளையோடும் பொலிக" எனப்பாடுவது ஊஞ்சல் ஆகும். மூளாய் சித்திவிநாயகர் ஊஞ்சல், சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், வண்ணை நகரூஞ்சல் போன்ற பல ஊஞ்சற் பதிகம் தோன்றியமையை குறிப்பிடலாம்.

பல்வகைப் பாக்களும், பாவினங்களும் அமைய புயவகுப்பு முதல் ஊசலீறாக பதினெண்ணுறுப்புக்களும் கலந்து அகம் புறமாகிய பொருள் விரவி எண்வகைச் சுவைகள் மலிய அந்தாதித் தொடையாய் அமைக்கப்படுவது கலம்பகம் ஆகும். நீர்வேலியைச் சேர்ந்த பீதாம்பரப் புலவரால் பாடப்பட்ட மறைசைக் கலம்பகம் இக்காலத்தே தோன்றிய கலம்பக இலக்கியமாக அமைகின்றது.

அகப்பொருட் துறைகள் அமைய நானூறு கட்டளைக் கலித்துறைப்பாக்களால் பாடப்படுவது கோவைப் பிரபந்தமாகும். வட்டுக்கோட்டை நாகேசு ஐயரால் அடைக்கலம் தோட்டகந்தசுவாமியார் மீது பாடப்பட்ட அடைக்கலங்கோவை வல்வெட்டியைச் சேர்ந்த குமாரசுவாமி முதலியாரால் பாடப்பட்ட அருளம்பலக்கோவை என்பன குறிப்பிடத்தக்கன.

நூறு திருப்பாட்டுக்களைக் கொண்ட பகுதி சதகமாகும். உடுப்பிட்டி சின்னத்தம்பிப் புலவரின் வீரபத்திரர் சதகம், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த சதாசிவம் பிள்ளையவர்களின் திருச்சதகமும் குறிப்பிடத்தக்க சதக இலக்கியங்களாக விளங்குகின்றன.

அகவற்பாவினால் ஆக்கப்படும் பிரபந்தம் அகவல் ஆகும். நல்லூர் பரமாநந்தப்புலவரின் நல்லைக்கந்தரகவலும் மயில்வாகனப் புலவரின் விநாயகரகவலும் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு பாடலின் இறுதி எழுத்து, அசை, சீர் அல்லது அடி அடுத்த பாடலின் முதலாக அமைய வரும் நூறு வெண்பாக்கள் அந்தாதி ஆகும். மாவை பொன்னம்பலப்பிள்ளையவர்களின் மாவை யந்தாதி, சபாபதி நாவலரின் மாவையந்தாதி திருகோணமலை ஆறுமுகப்புலவரின் திருகோணமலையந்தாதி, இருபாலை சேனாதிராசா முதலியாரின் நல்லையந்தாதி முதலியவை இக்காலத்து அந்தாதி இலக்கியங்கள் ஆகும்.

குறத்தி குறி கூறுவதும் குறவனுடன் பேசி மகிழ்வதுமாகிய செய்திகளை முன்னிலைப்படுத்திப் பாடும் பிரபந்தம் குறவஞ்சி யாகும். இருபாலை சேனாதிராசா முதலியாரின் நல்லைக் குறவஞ்சி, வட்டுக்கோட்டை விஸ்வநாத சாஸ்திரியாரின் வண்ணைக் குறவஞ்சி நகுலமலைக் குறவஞ்சி நல்லூர் சரவணமுத்துப் புலவரின் திருகோணமலைக் குறவஞ்சி என்பன குறிப்பிடத்தக்கன.

காதல் விரகதாபத்தால் துன்புற்ற ஒருவர் மற்றொருவர் பால் தம் வருத்தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருட்களை யேனும், அஃறிணைப் பொருட்களையேனும் விடுப்பது தூது ஆகும். நல்லூர் சந்திரசேகர பண்டிதரின் கிள்ளைவிடு தூது, திருகோணமலை சரவணமுத்துப்பிள்ளையின் தத்தைவிடு தூது இக்காலத்திற்குரியதாக விளங்குகின்றது.

வெண்பா யாப்பினால் பெயர்பெற்ற இலக்கியங்களும் இக்காலத்தில் தோற்றம் பெற்றுள்ளன. இருபாலை சேனாதிராசா முதலியாரின் நல்லை வெண்பா, நீராவிக் கலிவெண்பா என்பனவும் சுன்னாகம் முருகேசு பண்டிதரின் மயிலணிச் சிலேடை வெண்பா, குடந்தை வெண்பா என்பன விளங்கு கின்றன.

பதிக வடிவமாக பீதாம்பரப் புலவரின் வல்லிபுரநாதர் பதிகம், உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் கந்தவனநாதர் பதிகம், வல்லிபுரநாதர் பதிகம் என்பன விளங்குகின்றன. நாயக்கர் காலத்தில் தோன்றிய திருப்புகழ் ஈழத்தில் 19ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றுள்ளது. பீதாம்பரப் புலவரின் மறைசைத் திருப்புகழ், அருள்வாக்கி அப்துல்காதிருப் புலவரின் சந்தத்

திருப்புகழ், அசனாலெப்பைப் புலவரின் நவரத்தினத்திருப்புகழ் என்பவை குறிப்பிடத்தக்கன.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மூன்று அங்கங்கள் கொண்ட இசைப்பாடல் வடிவில் அமைந்த பிரபந்தமாகிய கீர்த்தனையும் இக்காலத்தே தோற்றம் பெற்றது. உடுப்பிட்டி சின்னத்தம்பிப் புலவரின் சிவதோத்திரக் கீர்த்தனை, நல்லூர்ப் பரமானந்தாப் புலவரின் நல்லைக் கந்தன் கீர்த்தனை என்பன குறிப்பிடப்படுகின்றன.

நாடக இலக்கியங்களும் இக்காலத்தே வளர்ச்சியடைந்தது. ''இலங்கையில் மிகச்சிறப்பாக வளர்ந்த இலக்கியத்துறை நாடகம் எனலாம்'' என கலாநிதி மு.வரதராசன் குறிப்பிடுவார். ஆரம்பத்தில் மரபுவழி வந்த கூத்துமுறை நாடகங்கள் பின் விலாச நாடகங்களாகவும், நாடகங்களாகவும் வளர்ச்சி அடைந்துள்ளன. கீத்தாம் பிள்ளையின் (1798) எருமை நாடகம், நொண்டி நாடகம், ஏரம்பதோர் நாடகம் என்பனவும் சுவாமிநாதரது (1765-1824) இராம நாடகம், தருமபுத்திர நாடகம் என்பனவும் கந்தப்பிள்ளையின் (1766 - 1842) இராம விலாசம், இரத்தின விலாசம், சந்திரகாச நாடகம், கண்டி நாடகம், ஏரோது நாடகம், சமநீக்கிலார் நாடகம் முதலியவையும் சிறப்பாக குறிப்பிடப்படுகின்றன.

மேலை நாட்டு இலக்கியத்துறையாகிய அகராதித்துறையும் ஈழத்தில் தோற்றம் பெற்றது. ஐரோப்பிய பாதிரியாராகிய வின்ஸ்லோ ஐயரின் தமிழ் ஆங்கில அகராதி, (1862) போர்சிவல் பாதிரியாரது தமிழ் ஆங்கில அகராதி, ஆங்கில தமிழ் அகராதி என்பனவும் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் இலக்கியச் சொல்லகராதியும் உடுவில் சந்திரசேகர பண்டிதரின் தமிழகராதி யும் கு. கதிரைவேற்பிள்ளையின் தமிழ் பேரகராதியும் நா. கதிரைவேற்பிள்ளையின் யாழ்ப்பாணத்தமிழ் அகராதியும் குறிப்பிடப்படுகின்றன.

இலக்கண நூல்கள் பலவும் இக்காலத்தில் தோன்றியுள்ளன. ஆறுமுகநாவலரவர்களின் இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை என்பனவும் சேர். பொன். இராமநாதனின் செந்தமிழ் இலக்கணம் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவரின் இலக்கணச்

சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம், என்பனவும் புலோலி ந. குமாரசுவாமிப் புலவரின் நன்நூற் காண்டிகையுரை விளக்கம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் சிவிலியன் தமிழ் இலக்கணம் என்பனவும் குறிப்பிடப்படுகின்றன.

மேலைநாட்டு இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகிய நாவல் இலக்கிய வடிவம் தோற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். 1885ஆம் ஆண்டு வெளிவந்த அறிஞர் சித்திலெப்பையின் அசன்பேயுடைய கதை ஈழத்தின் முதன் நாவல் என்ற சிறப்பைப் பெறுகின்றது. Orson vallentine என்ற போர்த்துக்கேய நெடுங் கதையைத் தழுவி திருகோணமலை இன்னாசித்தம்பியால் ஊசோன் பாலந்தை கதை 1891 ஆம் ஆண்டு வெளிவந்தது 1895 ஆம் ஆண்டு திருகோணமலை தி.த. சரவணமுத்துப்பிள்ளையின் மோகனாங்கி என்ற நாவல் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

மதக் கருத்துக்களை விளக்கும் தத்துவ நூல்களும் தோன்றியுள்ளன. ஆறுமுகநாவலரின் சைவசமய நெறியுரை, சைவ வினாவிடை நா. கதிரைவேற்பிள்ளையின் சைவசித்தாந்த சுருக்கம், சைவசந்திரிகை சங்கர பண்டிதரின் சைவப்பிரகாசனம், சு. சிவபாதசுந்தரம் அவர்களின் சைவபோதம் சி.வை. தாமோதரம் பிள்ளையின் சைவ மகத்துவம் வைத்திலிங்கம் பிள்ளையின் சைவ மகத்துவ திக்கார நிக்கிரகம் என்பவை குறிப்பிடப்படுகின்றன.

இந்து மதத்திற்கு எதிரான கிறிஸ்தவர்களது கண்டன நூல்களும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான இந்து மதத்தவர்களது கண்டன நூல்களும் தோற்றம் பெற்றுள்ளன. சுன்னாகம் சங்கர பண்டிதரின் கிறிஸ்தவ மத கண்டனம், சிவதூஷண கண்டனம் என்பவையும் ஆறுமுகநாவலரது வச்சிரதண்டம், சுப்பிரபேதம் என்பனவும் சபாபதி நாவலரின் சித்தாந்த மரபு கண்டன கண்டனம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய வசன இலக்கியங்களாக 1869 இல் சதாசிவம் பிள்ளையின் நன்னெறிக்கதா சங்கிரகம் 1875 இல் இராயர் அப்பாசிக் கதை 1893ல் நன்னெறிக்கதை 1898 இல் நைதர்சரிதம் என்பன குறிப்பிடப்படுகின்றன. தவிர ஆறுமுக நாவலர்து பாலபாடம் முதலிய நூல்களும் விதந்து குறிப்பிடத் தக்கனவாகும்.

பதிப்புத் துறையும் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்துள்ளன. இத்துறைக்கு முன்னோடியாக ஆறுமுகநாவலர் விளங்கினார். நாவலர் பதிப்பு என்றால் சுத்த மானது எனத் தமிழறிஞர் பெருமைப்படும் அளவிற்கு சிறப்பாக நெறிப்படுத்தியவர். இவரையடுத்து சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களையும் குறிப்பிட்டுக்காட்டலாம்.

உரைநடை உயர்வு பெற்று ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆறுமுகநாவலர் உரை நடையின் உயர்வுக்கு உறுதுணை புரிந்தார். இவரின் உரைநடை யின் சிறப்பினைக் கண்ட வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார் ''வசனநடை கைவந்த வல்லாளர்'' எனவும் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் ''தற்கால உரைநடையின் தந்தை'' எனவும் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டலாம். இவரால் எழுதப் பட்ட வசன நூல்கள் கண்டன நூல்கள் என்பனவற்றில் இவரின் உரைநடைத் தெளிவைக் காணலாம்.

கிறிஸ்தவ மதப்பிரச்சாரத்திற்காக வந்த மிஷனரியினர் பத்திரிகைகளையும் ஆரம்பித்தனர் மானிப்பாய் அச்சுக்கூடத்தில் இருந்து 1841ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ம் திகதி உதயதாரகை என்ற இலங்கையின் முதல் தமிழ்ப்பத்திரிகை உதயமாயிற்று. வாசனைப் பழக்கத்தைதூண்டுவதையும் இந்துக்களின் கவனத்தை தன்பால் ஈத்தலையும் முதன்மைப்படுத்தத் தோன்றிய உதயதார கையைத் தொடர்ந்து உதயாதித்தன், உரைகல்லு, வித்தியாதர்ப் பணம், விறிமன், இலங்காபிமானி, இலங்கைக் காவலன் போன்ற கிறிஸ்தவ பத்திரிகைகளும், இலங்கை நேசன், சைவ உதயபானு, சைவசமயபோதினி, விஞ்ஞானவர்த்தினி போன்ற சைவப் பத்திரிகைகளும் முஸ்லிம்நேசன் சர்வஜனநேசன் சைபுல் இஸ்லாம், இஸ்லாம் மித்திரன், இஸ்லாம் பாதுகாவலன் போன்ற இஸ்லாமியப் பத்திரிகைகளும் வெளிவந்துள்ளன.

மொழிபெயர்ப்பு முயற்சிகளும் இக்காலத்தில் இடம் பெற்றுள் ளன. புலோலி வ. கணபதிப்பிள்ளையின் வடமொழி மொழி பெயர்ப்பாகிய வில்ஹனியம், வாதபுரேசர்கதை என்பனவும் குமாரசுவாமிப் புலவரினால் சமஸ்கிருதத்தில் இருந்து

மொழிபெயர்க்கப்பட்ட மேகதூதக்காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா என்பனவும் காசிவாசி செந்திநாதையரின் நீலகண்டபாஷ்யம் திருஞானசம்பந்தப் பிள்ளையின் தர்க்காமிர்தம் நாகநாதபண்டிதரின் மானவ தர்மசாஸ்திரம், பகவத்கீதை, மேகதூதம் என்பனவும் மொழிபெயர்ப்பு இலக்கியங்களாகும்.

வரலாறு சார்பான இலக்கியங்களாக சைமன் காசிச் செட்டியவர்களின் தமிழ்ப்புலவர் வரலாறு (Tamil plutarch) இலங்கைச் சரித்திர சூசனம் (மொழிபெயர்ப்பு), சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் தமிழ்ப் புலவர் சரிதம், ஆர்னால்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகம், பூபாலபிள்ளையின் தமிழ் வரலாறு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அறிவியற்துறை இலக்கியங்களாக சுப்பிரமணியபிள்ளையின் பதார்த்த விஞ்ஞானம், பால வைத்தியம், பிரசவ வைத்தியம் என்பனவும் நாகேசு ஐயரின் அமுத நுணுக்கம் என்னும் விட வைத்திய நூலும் டாக்டர் கிறீன் அவர்களின் மனுஷ அங்காதி பாதம், பிரசவ வைத்தியம், இரண வைத்தியம் முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

19ஆம் நூற்றாண்டின் இலக்கியப் பண்புகள்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கில் 19ஆம் நூற்றாண்டு மதப்பிரச்சாரம் இடம்பெற்ற காலம் ஆகும். இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், ஆகிய மதங்கள் தம் மதக்கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதற்கு இலக்கியங்களையே பயன்படுத்தின. இதனால் சமயப் பிரச்சார வாகனமாக அமைதல் என்ற பண்பு 19ஆம் நூற்றாண்டின் இலக்கியங்களிற்குரியதா கின்றது. ஈழத்தில் உள்ள சைவ ஆலயங்கள் மீது எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கடவுளர் மீது பாடப்பட்ட அந்தாதி ஊஞ்சல், அகவல், மான்மியம் முதலிய பிரபந்தங்கள் இந்து மதப் பிரச்சார இலக்கியங்கள் ஆகும். ''ஈழத்தில் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் கோயில்கள் இல்லாத ஊர்களுமில்லை பாடல் பெறாத கோயில்களும் இல்லை'' எனப் பேராசிரியர் ஆ. சதாசிவம் குறிப்பிடுவர்.

''கொடிவளரு மணிமாடக் கோபுரஞ்சூழ் நல்லூரின்

குமர மூர்த்தி அடியருளத் திருளகல அமரர் முகமலர''

என நல்லைக் குறவஞ்சியிலும்

''போற்று மடியார் பிறவிப் புன்மை

இருள் நீக்குதலாநாற்றிசையும் வந்திறைஞ்சும்''

என நல்லை வெண்பாவிலும்

''பதறா மனமும் பகை சினம் பொய் மன்னாவறியும்
மருவா வினையும் வாரா பிறப்பும் சொன்னா
வரும் இன்பமும் தா''

எனத் திருகோணமலை அந்தாதியிலும் கூறப்படுவதனைச் சுட்டிக் காட்டலாம்.

கிறிஸ்தவ மதக்கருத்துக்களை விளக்கும் இலக்கியங்களாக திருவாக்குப் புராணம், ஏரம்பதோர் நாடகம் வெல்லையந்தாதி முதலியவை விளங்குகின்றன.

''பார்மேவு பெத்தலையெம்பதியில் வெல்லைப்
பருப்பதத்தில் மனுச்சுரூபம் படைத்து வந்த
நேர்மேவு மேசு நசரேனு பாதம்''

என ஏரம்ப தோர் நாடகத்திலும்

''சேயே மரியம்மை தந்திடு
செல்வத் திருக்கொழுந்தே தாயா யுலகங்கடந்தவனே''

என வெல்லையந்தாதியிலும் வரும் பாடலைச் சுட்டலாம்.

இவ்வாறே அருள்வாக்கி அப்துல்காதிறுப் புலவரின் சந்தத் திருப்புகழும் அசனாலெப்பைப் புலவரின் நவரத்தனத் திருப்புகழும் இஸ்லாமியக் கருத்துக்களைச் சுமந்து வருபனவாக அமைந்துள்ளன.

தலப் பெருமையும் சிறப்பும் கூறுதல் 19ஆம் நூற்றாண்டின் இலக்கியங்களின் சிறப்பாகும். தென்கதிரை, நல்லூர், மாவை, கோணேஸ்வரம் முதலிய தலங்களில் வீற்றிருக்கும் இறைவனையும், அத்தலங்களின் சிறப்பினையும் போற்றியும் புகழ்ந்தும் பாடியுள்ளனர். ''கொடி வளரும் மணிமாடக் கோபுரம் சூழ் நல்லூர்'' என நல்லைக் குறவஞ்சியும் ''செந்நெல் பழனத் திருநல்லை'' என நல்லூரார் கிள்ளைவிடு தூதும் ''பூமா திருநிறை பொற்கோண வெற்பிறை பூத்த புக'' எனவும் ''மறை முதலாமரன் வைகிய கோணமலை மயிலே'' என திருகோணமலை அந்தாதியிலும் வருவதனைக் குறிப்பிடலாம்.

உரைநடை உயர்வுபெற்ற காலம் 19ஆம் நூற்றாண்டாகும். வசனநடை கைவந்த வல்லாளர் என புகழப் பெறும் ஆறுமுக

நாவலர் உரைநடைக்கு உந்துதல் அளிக்க உரைநடை சிறப்புப் பெறுகின்றது. பத்திரிகை நடை, பாடப்புத்தக நடை, கட்டுரை நடை, கண்டன நடை, ஆக்க இலக்கிய நடை என்றெல்லாம் வெவ்வேறு விதமான உரைநடைகளை இக்கால ஈழத்து அறிஞர்கள் கையாண்டனர் என கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா குறிப்பிடுவர். இவ்வகையில் ஆறுமுகநாவலர் சி.வை.தாமோதரம் பிள்ளை, கறல் விசுவநாதபிள்ளை நா. கதிரவேற்பிள்ளை ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை முதலியோர்களைக் குறிப்பிடலாம். உரைநடையின் பல பரிமாணச் செல்நெறியை இக்காலப் பகுதியில் தெளிவாகக் காணமுடிகின்றது. இக்காலத்தெழுந்த கண்டனங் களிலே வீறார்ந்த உரைநடை ஒன்று கையாளப்பட்டு இருப்பதைச் சுட்டிக்காட்டலாம் என கலாநிதி எஸ். சிவலிங்கராஜா குறிப்பிடுவர்.

பல்வேறு சொல்லலங்காரங்களைக் கொண்டமைதல் இக்கால ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் சிறப்பாகும், இரட்டை நாக பந்தம், பதுமபந்தம், இரதபந்தம் காகாபாதபந்தம், நாகபாச பந்தம், நான்காரச் சக்கரபந்தம், முரச பந்தம் முதலிய செய்யுள் வகைகளைப் பாடிய க. மயில்வாகனப் புலவர், சிலேடை பாடுவதிற் புகழ்பெற்ற முருகேச பண்டிதர் யமகம், திரிபு, மடக்கு முதலிய சொல்லலங்காரங்கள் பாடிய உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் முதலியோரை விதந்து குறிப்பிட்டுக் காட்டலாம். மயில்வாகனப் புலவரின் மாலை மாற்றுச் சொல்லலங்காரத்திற்கு

வேக மாகமு னோடிவா
வான வாகன மேறுநா
நாறு மேனக வானவா
வாடி னோமுக மாகவே

என்றும் பாடலில் மேலிருந்து கீழ்நோக்கி வாசிக்கும் போதும் கீழிருந்து மேல்நோக்கி வாசிக்கும்போது ஒரே மாதிரி அமைதலைக் காணலாம். இவ்வாறே வேலாயுத பந்தம் என்னும் பாடலிலும் சொல்லலங்காரம்

மாக லாநய னாகிவா
வான மாகக னாகவா

வாக னாகக மானவா

வாகி னாயந லாகமா

சிறப்புற்று வருவதைக் குறிப்பிடலாம். ''இலக்கணக் கொண்டன்'' என அழைக்கப்படும் சுன்னாகம் முருகேச பண்டிதர் மயிலணிச் சிலேடை வெண்பா என்னும் பிரபந்தத்தில் வரும்

''நெட்டையிலை வைத்திருக்கும் செவ்வேள் அல்ல

நெடிதோங்கித் தண்டேந்து மாலு மல்ல

கட்டுவா னாரலிக்கும் பிரமனல்ல

கனிவெட்டி எடுத்தலாற் சுரங்க மல்ல

நட்டவரைத் தனபதியா இருக்கச் செய்யும்

நன்மையினர் நாம் வணங்கும் ஈசனல்ல

சிட்டரெல்லாம் கொள்ளு மொரு பொருளே யாகுஞ்

செகமறிய இப்பொருளைச் செப்புவீரே''

என வரும் விரோதச் சிலேடை வெண்பாவையும் சுன்னாகம் முத்துக்குமார கவிராயரின்

''முடிவிலாத் துறை சுன்னாகத்தான் வழி

முந்தித் தாவடி கொக்குவின் மீது வந்

அடையவோர் பெண் கொடிகாமத் தாளசைத்

ஆனைக்கோட்டை வெளிக் கட்டுடை விட்டாள்

உடுவிலாள் வரப் பன்னாலையான் மிக

உருத்த னன் கடம் புற்ற மல்லாகத்தில்

தடை விடாதனை என்று பலாலிகண்

சாற்றி வந்தனள் ஓரிள வாலையே''

என்ற பாடலில் யாழ்ப்பாணத்தில் உள்ள இடங்கள் சிலேடையாகச் சுட்டிப் பாடப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

எளிதில் பொருள் விளங்கமுடியாத தன்மைகளைக் கொண்ட பாடல்களும் இக்காலப் புலவர்களினால் பாடப்பட்டன. வறுத்தலை விளான் மயில்வாகனப் புலவரின் நகுலேச்சர வினோத விசித்திரக் கவிப்பூங்கொத்தில் வரும்

''செம்மான் கைக் கொண்டவ னம்பட்டன் வண்ணான் செலுத்து மள்ளன்

றம்மான் குயவம்பினான் கச்சிடையன் றபக்கரையா

னம்மான் குடிநற் பறையனோர் வேட னணிநகுலைப்

பெம்மா னெனத்துதி யாய் நமைப் பார்ப்பான் பெரிதுவந்தே''

என்ற பாடலில் மானைத் தரித்தவர், அழகிய பட்டு வஸ்திரத்தை உடையவர், அழகிய இடபத்தைச் செலுத்தும் வீரர், தமது சக்தியின் தனங்களிடத்தே அன்புடையவர், கச்சணிந்த ஆடையை உடையவர், தபமாகிய துறையில் உடையவர், பல வேடங்களை ஏற்று அழகிய நகுலேச்சரத்தில் அமர்ந்து அருள் பாலிக்கின்றார். என்ற கருத்தை அரிதிற் பொருளுணருமாறு பாடியுள்ளமை கவனிக்கத்தக்கது.

தூய தமிழ்நடை 19ஆம் நூற்றாண்டில் சிறப்புப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கிலேயர் காலத் தமிழ்ப் புலவர்கள் கையாண்ட தமிழ்நடை இனிமையும் தூய்மையும் உடைய செந்தமிழ் நடை என்பதனை உலகுக்கு உணர்த்துகின்றது. ''சைவம் பொலிக தமிழ் தழைக தாரரசர் செவ்விய கோல் உய்க வளர் சீர் நல்லை'' என நல்லை வெண்பாவிலும், ''தண்டமிழ்க் கலைஞர் சங்கம் வாழ்க வாழி தானியம் மிகப்பெருகி வாழ்க வாழி'' என ஏரம்பதேரர் நாடகத்திலும் ''வண்டமிழ் வாக்கும் மனமும் ஒன்றாக்கி இன்னிசையோடும் யாழினைப்பாட'' என நகுலமலைக் குறவஞ்சியிலும் ''செந்தமிழ்ப் புலவீர் அவை பொறுத்தருள்வீர் தேவசாரித்திர மெனவே'' என இராம விலாசத்திலும் ''தங்கா மலந்தர மார்க்கம் தவம் புரிந்தாலும் தமிழ் மங்கா துடுவைவருமருளம்பல மன்னன்'' என அருளம்பலக் கோவையிலும் ''புது மது வருந்தியாசை கூடக் கருங்குயில்கள் புத்தமிழ் துறந்து பாட'' என தீருவிற் சுப்பிரமணியர் பதிகத்திலும் ''சந்த விலாசத் தமிழாலியம்புதற்குத் தந்திமுகன் தாள் சரண்'' என நளச் சக்கரவர்த்தி விலாசத்திலும் வரும் அடிகளைச் சுட்டிக் காட்டலாம்.

பேச்சுவழக்குச் சொற்கள் மிகுந்து வருதல் அக்கால இலக்கியங் களின் அம்சம் ஆகும். ''கோதிலா இடைச் சேரியின் கோவின் குடிலினில் உதித்தவா போற்றி'' எனவும் ''ஆழிப் பொருள் மாடாடு வாழ்க வாழி'' என ஏரம்பதேரர் நாடகத்திலும் ''மருவளர் மிதிலை மணம் புரிந்தே தம் வளநகர்க் கேகும் அவ்வழியில்'' என

இராம விலாசத்திலும் ''செத்தார் பிழைத்தார் செறுநோய்யிலாத வரார் மற்றார் இவை பிழைத்து வைகுவார்'' எனவும் ''தன்னுயிர் போல் பிறவுயிருந் தான் பேணி'' எனவும் முருகேச பண்டிதர் நீதிநூறு என்னும் பிரபந்தத்தில் பாடியுள்ளதை யும் குறிப்பிடலாம். இவ்வாறே இக்காலத்தே தோற்றம் பெற்ற நாவல் இலக்கியங் களிலும் பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்துள்ளதனையும் குறிப் பிடலாம்.

19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் சிறப்புப் பெற்ற இலக்கிய முயற்சி பதிப்புத்துறையின் வளர்ச்சியாகும். தமிழ் நூற் பதிப்புத் துறைக்கு அடிக்கல் வைத்தவர் ஆறுமுக நாவலர் ஆவார். நூற் பதிப்புத் துறையில் நாவலருக்கு ஈடானார் யாரும் இல்லை என்பதனையே ''நாவலர் பதிப்பு'' என்றால் ''சுத்தப்பதிப்பு'' என்ற தனித்துவ இடத்தை தமிழ் கூறு நல்லுலகம் நாவலருக்கு வழங்கிச் சிறப்பிக்கின்றது. நாவலரைத் தொடர்ந்து சி.வை. தாமோதரம்பிள்ளை, ச. தம்பிமுத்துப்பிள்ளை, வல்வை வயித்திலிங்கப்பிள்ளை, காரைதீவு மு.கார்த்திகேய ஐயர், வித்துவ சிரோண்மணி பொன்னம்பலப்பிள்ளை முதலானோர் சிறப்பான பணியாற்றினர்.

ஈழத்தில் 19ஆம் நூற்றாண்டிலேயே தமிழ் இலக்கிய வரலாற்றுச் சிந்தனை முளைவிடத் தொடங்குகின்றதனை அவதானிக்கலாம். இச் சிந்தனையின் முன்னோடியாக சி.வை. தாமோதரம் பிள்ளையைக் குறிப்பிடலாம். இவர் தமது வீரசோழியப் பதிப்புரையில் தமிழ் இலக்கிய வரலாற்றை அபோதகாலம், அசஷ்ரகாலம், இலக்கணகாலம், சமுதாய காலம், அநாதர காலம், சமணர் காலம், இதிகாச காலம், ஆதீனகாலம் ஆகிய எட்டுக் கால கட்டங்களாகப் பாகுபடுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கது. இவ்வாறே சைமன் காசிச் செட்டியின் தமிழ் புளூராக், ஆர்னால் சதாசிவம் பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகம், சுன்னாகம் குமாரசாமிப்புலவரின் தமிழ்ப்புலவர் சரித்திரம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

ஈழத்தில் அகராதித்துறைக்கு அடியெடுத்துக் கொடுத்த காலம் 19ஆம் நூற்றாண்டாகும் உடுப்பிட்டி கு. கதிரவேற்பிள்ளையின்

தமிழ்ப் பேரகராதி நா. கதிரைவேற்பிள்ளையின் யாழ்ப்பாண அகராதி, சுன்னாகம் குமாரசாமிப்புலவரின் இலக்கியச் சொல்லகராதி முதலியவை குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்ற மேலைத்தேச இலக்கிய வடிவமான நாவல் ஈழத்திலும் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லிம் அறிஞரான சித்திலெவ்வையின் அசன்பே சரித்திரம் ஈழத்தின் முதன் நாவல் என்ற சிறப்பினைப் பெறுகின்றது. திருகோணமலை தி. சரவணமுத்துப்பிள்ளையின் மோகனாங்கி, திருகோணமலை இன்னாசித்தம்பியின் ஊசோன் பாலந்தை கதை முதலிய நாவல்கள் இக்காலத்தே தோற்றம் பெற்றன. பத்திரிகைத்துறையின் வளர்ச்சி இக்காலத்திலே எழுச்சியுடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். உதயாதித்தன், வித்தியாதர்ப்பணம், பாலியர் நேசன், இலங்கை நேசன், சத்தியவேத பாதுகாவலன், சைவ உதயபானு, விஞ்ஞானவர்த்தனி, இந்து சாதனம், வைத்தியவிசாரணி, சைவ அபிமானி, சன்மார்க்க போதினி என்பவை குறிப்பிடப்படுகின்றன.

சமூகச் செய்திகளையும் சமுதாயச் சீர்கேடுகளையும் சித்திரித்தல் இலக்கியப் பண்பாகும். தத்தைவிடுதூது, கனகி புராணம் முதலிய இலக்கியங்களில் இவற்றைத் தெளிவாகக் காணமுடிகின்றது. இக்காலத்து ஈழத்தில் பெண்களின் நிலையை குறிப்பிடும் தத்தைவிடுதூது ''பெண்ணருமை தானறியாப் பேதையர்க்குப் பெண் கொடுத்தார்'' எனவும் ''கல்வி நலம் பெற்றனரேற் காரிகையர் காதலர்க்குச் சொல்லரு நற் துணையன்றோ தொல்லுலகு சிறக்குமன்றோ'' எனவும்

''கூட்டிற் பசுங்கிளிபோல் கோதையரை எப்பொழுதும்
வீட்டில் அடைத்து வைக்கும் விரகிலருக் கியாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகக் கருதினரோ''

என வரும் பாடலடிகளைச் சுட்டிக் காட்டலாம். பாரதி காலத்தில் விழிப்புப் பெற்ற பெண் விடுதலை என்னும் கருப்பொருளை பாரதிக்கு முன்பே சரவணமுத்துப் பிள்ளை சுட்டிக் காட்டியுள்ளார் என கலாநிதி எஸ். சிவலிங்கராஜா குறிப்பிடுவர்.

சமூகச் சீர்கேட்டைச் சுட்டிக்காட்ட எழுந்த மற்றோர் நூல் கனகிபுராணம் ஆகும். வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலின் தேவதாசிகளில் ஒருத்தியான கனகி என்பவள் பெயரிற் பாடப் பட்டதாகும். இதனைப் பாடியவர் சுப்பையனார் என்பவராவர். கனகியின் வருகைக்கு நட்டுவன் ஒருவனே காரணம் என்பதை சிலேடையாக

"நட்டுவ னொருவனாலே நாடக சாலை வந்தாள்
செட்டியில் ஒருவன் பட்டான் சேணியர் இருவர் பட்டார்
மட்டுவில் குருக்கள் பட்டார் கொக்குவிற் சுப்பன் பட்டார்
மட்டிகள் இவரைப் போலப் பட்டவர் பலபேர் அந்தோ"

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

மரபுவழிப் புலவர்களாற் புனிதமான இலக்கிய வடிவமாகக் கொள்ளப்பட்ட புராணம் என்னும் இலக்கிய வடிவத்தோடு சமகாலச் சமூகச் சீரழிவொன்றை உட்பொருளாகக் கொண்டு பாடுவதில் கனகி புராண ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார் என கலாநிதி சி. சிவலிங்கராஜா குறிப்பிடுவர். கனகியிடம் வந்து போகும் தமது காலத்துப் பிரபுக்களின் ஒழுக்கக் கேட்டினை தோழி தலைவிக்கு அறிமுகம் செய்வது போல் அமையும்.

மனுவற்றிலங்கு மதி முகத்தில்
வான் சேர்ந் தனைய வுன் கண்ணால்
நிறையச் செருகும் பூங்கழற்கு
நிகர் வேறில்லாக் கனகமின்னே
அறிவுக் கினியான் அவனி தனில்
யார்க்கு முதவி செய்ய விரும்புங்
கறுவற் றம்பி யெனும் பெயரோன்
கண்ணன் றனக்குச் சரிவந்தோன்

என்ற பாடலை ஒரு பதச் சோறாகச் சுட்டிக் காட்டலாம்.

மொழிபெயர்ப்புத் துறையின் வளர்ச்சியும் இக்காலத்தில் சிறப்பிடம் பெறுகின்றது. கு. முத்துக்குமாரசாமியின் அரிச்சந்திர நாடகம் பிறிற்றோவின் யாழ்ப்பாண வைபவமாலை என்பன தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மத நூலாகிய பைபிள் ஆங்கிலத்தில் இருந்து ஆறுமுக நாவலரால் தமிழிற் பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறே புலோலி வ. கணபதிப்பிள்ளையின் வில்கனீயம் இரகுவம்சச் சுருக்கம், இந்திரசேனை நாடகம் என்பன வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டமையையும் சுட்டிக் காட்டலாம்.

உசாத்துணை நூல்கள்

1.	அரசகேசரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்து பண்பாட்டு சூழலும்	பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
2.	இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு	தேசிய கல்வி நிறுவகம்
3.	இலங்கையின் தமிழ் இலக்கிய வளர்ச்சி	கலாநிதி துரை மனோகரன்
4.	இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும்	ஜி. தனபாக்கியம் (M.A)
5.	ஈழத்து இலக்கிய முன்னோடிகள்	பேராசிரியர். க. கைலாசபதி
6.	ஈழத்தில் தமிழ் இலக்கியம்	பேராசிரியர் கா. சிவத்தம்பி
7.	ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி	கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
8.	ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி	கலாநிதி.க.செ. நடராசா
9.	ஈழத்துத் தமிழ் கவிதை களஞ்சியம்	பேராசிரியர். ஆ. சதாசிவம்
10.	ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி	க. சொக்கலிங்கம் (M.A)
11.	ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்	கலாநிதி நா. சுப்ரமணியம்
12.	ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு	வித்துவான். F.X.C. நடராசா
13.	ஈழ நாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்	தென் புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை
14.	கனகி புராணம்	சுப்பையனார்
15.	சரசோதி மாலை	(பதி) இ.சி. இரகுநாதையர்
16.	செகராசசேகரம்	
17.	செகராசசேகரமாலை	(பதி) இ.சி. இரகுநாதையர்
18.	தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர் பெருமுயற்சிகள்	கலாநிதி. பொ. பூலோகசிங்கம்
19.	தமிழ் இலக்கிய வரலாறு	பேராசிரியர் டாக்டர். மு.வரதராஜன்
20.	தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்	தி.மதிவதனன்
21.	தொடக்க கால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்	பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
22.	19ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியமும்	மயிலை சீனி வேங்கடசாமி
23.	பரராசசேகரம்	ஐ. பொன்னையாபிள்ளை
24.	பாவலர் சரித்திர தீபகம்	அர்னால்ட் சதாசிவம்பிள்ளை
25.	யாழ்ப்பாண வைபவமாலை	மாதகல் மயில்வாகனப் புலவர்

நூலாசிரியர் பற்றி. . .

ஆசிரியர் திரு. தி. மதிவதனின் நீண்டகால கற்பித்தல் மூலம் கிடைத்த அனுபவத்தின் முதிர்ச்சியை இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது. பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இந்நூல் அமைக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் மட்டுமன்றி ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஆர்வமுள்ள பலரும் இந்நூல்மூலம் பயனடைவர்.

வீ. இராசையா
கல்விப் பணிப்பாளர்
வலிகாமம்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மாணவர்களைச் சிந்திக்க வைக்கவும் வாசிப்பில் ஈடுபட வைக்கவும் தேடலில் செயற்பட வைக்கவும் வல்ல ஆக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. நீண்ட கற்பித்தல் அனுபவம் காரணமாக நூலாசிரியர் திரு.தி. மதிவதனன் அவர்கள் தாம் திரட்டிய இலக்கியத் தகவல்களை வரன்முறையாகத் தொகுத்தும் நிரற்படுத்தியும் சிறப்பார்ந்த பண்புகளை முன்னிலைப்படுத்தியும் நூலாக்கத்தைச் செம்மைப்படுத்தி உள்ளமை பாராட்டுதற்குரியது.

பேராசிரியர் சபா. ஜெயராசா
கல்வியியற்துறை
யாழ். பல்கலைக்கழகம்

''தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்'' என்ற நூலின் வழி தமிழ் மாணாக்கரிடையேயும் தமிழ் ஆர்வலரிடையேயும் நன்கு பரிச்சயமான திரு. தி. மதிவதனன் அவர்களுடைய பிறிதொரு படைப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு வெளிவருகின்றது. உயர்நிலைப் பட்டப் படிப்புக்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றை விரிவான நிலையில் அறிமுகப்படுத்துவதில் இந்நூல் வெற்றி கண்டுள்ளது.

கலாநிதி கி. விசாகரூபன்
தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்

லங்கா புத்தகசா[illegible]
F.L. 1-14, டயஸ் பிளே[illegible]
குணசிங்கபுர, கொழும்பு-12
தொ.பே. (011)2341942
தொ.நகல் (011)2459431

VARALAU